தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

திருவள்ளுவராண்டு — 2029 வெகுதானிய

ஐப்பசி

துணர் : 72] நவம்பர் - 1998 [மலர் : 7

தமிழ்ப்பொழில்

பதிப்பாசிரியர் : *பாவலர். ச. பாலசுந்தரம்*

உள்ளுரை

1. அறிவு 241

2. சொல் பற்றிய விளக்கங்களும் கருத்துக்களும்
எஸ். ஜெயசுதா 243

3. வேளாண் பழமொழிகள்
பி. பத்மா 249

4. பாரதிதாசனும் மார்க்சியமும்
தெ. திருஞானமூர்த்தி 255

5. பாவேந்தரின் தொழிற் பாடல்கள்
முனைவர். வே. சா. அருள்ராஜ் 265

6. விலயாழ்
வா. கோ. கிருஷ்ணமூர்த்தி 269

தமிழ்ப் பொழில் கட்டணம்

	உள்நாடு	வெளிநாடு
தனியிதழ்	ரூ. 5.00	ரூ. 10.00
ஆண்டுக் கட்டணம்	ரூ. 60.00	ரூ. 120.00
வாழ்நாள் கட்டணம்	ரூ. 500.00	ரூ. 1000.00

வேண்டுகோள்

தமிழில் ஆய்வுக் கட்டுரைகள் வேண்டப்பெறுகின்றன. கட்டுரைகள் ஆறு பக்க அளவில் அமைதல் நலம். நெடிதாயின் வகைப்படுத்தித் தருக. இருவரி இடைவெளியிட்டு, தட்டச்சிட்டு இருபடிகள் அனுப்புக. வெளியிடப்பெறாத கட்டுரைகள் திருப்பியனுப்பப் பெறா.

அறிவு

அறிவு என்பதற்குப் பொதுப்பொருள் புறத்தும் அகத்தும் உள்ள பொருள்களையும் அவற்றின் செயல்களையும் அவற்றால் எய்தும் பயன்களையும் மெய் முதலாய பொறிகளின் வாயிலாக உள்ளத்துணர்வாற் கண்டு கொள்ளுதல் என்பதாகும். இது சமணர்தம் கோட்பாடு அதனான்

வானவர் மக்கள் நாகர் விலங்குபுள்
ஆதிசெவியறி வோ டையறிவுயிரே என்றாற் பவணந்தியார்

மக்கள் ஐம்பொறிகளான் கண்டு கொள்ளப்பெற்ற பொருளியல்புகளை உள்ளத்தால் உணர்ந்து மனத்தால் எண்ணி நலந்தீங்குகளைத் தெரிந்து கொள்ளுதலைத் தமிழ்ச் சான்றோர்கள் ஆறாவது அறிவு என்றனர். அதானன், “ஆறறிவதுவே அவற்றொடுமனனே” என்றும்,

“மாவும் மாக்களும் ஐயறிவுயிரே
மக்கள்தாமே ஆறறிவுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே” என்றும் தொல்காப்பியனார் விளம்பினார்.

மனம் என்பது யாது? உள்ளுணர்வான் ஒன்றைத் தெரிதல் புரிதல் தெளிதல் என்னும் பொது அறிவாகும். அவ்வறிவைச் சென்ற விடத்தாற் செலவிடாது தீது ஒரீஇ நன்றின்பால் உய்ப்பது சிறப்பறிவு அத்தகு சிறப்பறிவை உடையதே மனம் எனப்படும். மனத்தின் செயல் ஒரு பொருளைக் கருதி எண்ணி ஆய்ந்து முடிவு செய்தலாகும். அங்ஙனம் ஆராய்ந்து முடிபினைச் செய்யும் அறிவை அக்கருவி என்பர் நூலோர்.

கருவி என்பது ஒரு காரியத்தை விரும்பியாங்குச் செய்து உருவாக்குதற்கு அடிப்படையான பொருளாகும். அது முதற்கருவி, துணைக்கருவி, நிமித்தக்கருவி என மூவகைப்படும்.

முதற்கருவி என்பது காரியப்பொருளொடு ஒன்றுபட்டு அதுவேயாக இருப்பது துணைக்கருவி காரியம் முடிந்தபின் நீங்கி விடுவனவும் நீங்காது உடன் நிற்பனவும் என இருதிறப்படும். நிமித்தகருவியும் அவ்வாறேயாம். கொற்றன் சோற்றைச் சமைத்தான் என்னுமிடத்துச் சோறுகாரியம் அரிசி முதற்கருவி, நீர் நெருப்பு அடுகலன்கள் துணைக்கருவி. உண்பவன் நிமித்தக்கருவி. இத்தகு காரியங்களில் துணைக்கருவியும் நிமித்தக்கருவியும் நீங்கிவிடும். கண்ணன் கல்வியைப் பயின்றான் என்னுமிடத்து கல்வி காரியம், முதற்கருவி நூற்பொருள் துணைக்கருவி கண்ணும் செவியும் மனமும் நிமித்தக்கருவி. பயிலும் கண்ணன். இக்காரியத்தில் மூன்று கருவிகளும் காரியத்தொடு ஒற்றுமையுடையவை அது போன்றே அறிவு என்னும் காரியத்திற்கு அதுவே மூவகைக் கருவியாகவும் இருத்தலான் கருவிகளுள் ஒப்பற்ற கருவி அறிவு என்பது புலனாகும்.

அதனான் நன்றின்பால் உய்ப்பதாகிய அறிவினைப் பெற்ற ஒருவர் அக்கருவியைக் கொண்டு புறப்பகையையும் அகப்பகையையும் வென்று தாம் எண்ணிய குறிக்கோளை எளிதிற் பெறுவர் பகை தோற்கும் பகை தோற்பின் தமக்கு அழிவில்லை என்பது உறுதி. எனவே அறிவுக்கருவி ஒருவரை அழிவினின்று காக்கும் என்பது தெளிவாகிறது.

மக்கத் தோன்றிய காலத்தில் தோன்றிய ஏனைய விலங்கினங்கள் அழிந்து கொண்டே வருதலையும் மக்கள் பெருகிக் கொண்டே வருதலையும் காண்கின்றோம். அரியேறு, யானை, புலி முதலிய வலிமை வாய்ந்த விலங்குகளும் மக்களிடத்தில் தோற்று அழிகின்றன. தீதின்பாற் செல்லும் அறிவு காரணமாக எழும் போர் முதலியவற்றாலன்றி நன்றின் பால் உய்க்கும். அறிவால் அழிவதில்லை. இயற்கைச் சீற்றங்களை வென்று அடக்கியும் நோய்ப்பகையினை நாடொறும் புறங்கண்டும் மடமையை வென்றும் வருகின்றனர். ஞான யோக காய கற்பங்களால் பல்லாண்டுகள் வாழ்கின்றனர். விஞ்ஞானத்தாலும் ஆன்மீகத்தாலும் அழியாப்புகழை எய்துகின்றனர்.

மாசற்ற அறிவால் விளையும் போர்களினின்றும் உய்ய அமைக்கும் அரண்கள் அழிகின்றன. அறிவுத்திறனால் அமைக்கும் பொருளாதார அரண்கள் அவ்வளவு எளிதாக அழிவதில்லை. தொழில் நுட்பங்களும் பொருளாதாரப் பாதுகாப்பும் அரண்களாக அமைகின்றன. உலகையே வெல்லும் ஆற்றல் வாய்ந்த போர்க் கருவிகளையும் பகைகளையும் கொண்டிருந்த வெள்ளையர்களால் இந்திய விடுதலைப் போரில் பிறர்க்குத் தீங்கிழையாமை. அறப்போர், உண்ணா நோன்பு முதலிய நல்லறிவாகிய கருவிகளால் எழுப்பிய அரண்களை அழிக்க இயலாமல் தோற்றனர்.

அதனான் பொய்யா மொழியார் அறிவுடைமையைப் பற்றிக் கூறத்தொடங்கிய காலை அறிவின் ஆற்றலையும் ஒப்பற்ற பயனையும் சுட்டி

"அறிவு அற்றங்காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க ஆகா அரண்" என முதற்கண் உணர்த்திப் பின் அதன் இலக்கணம் முதலியவற்றைக் கூறுவாராயினார் அறிவென்பது யாது? என்னும் மாணாக்கனை நோக்கி. அது அற்றம் காக்கும் கருவி என்கிறார். (அற்றம் – அழிவு) அதன் வலிமையும் பயனும் யாது? எனின் செறுவார்க்கும் உள்ளழிக்க ஆகா அரண் என்கிறார். உம்மை நட்பினும் நொதுமலரும் போற்றுவர் என்னும் பொருள்படநின்றது.

ச.பா.

சொல் பற்றிய விளக்கங்களும் கருத்துக்களும்

எஸ்.ஜெயசுதா
முனைவர் பட்ட ஆய்வாளர்,
புதுவைப் பல்கலைக் கழகம்.

முன்னுரை :

சொல்லாராய்ச்சி பற்றி முதன் முதலில் நூல் எழுதி வெளியிட்ட பெருமை மாகறல் கார்த்திகேய முதலியாரையே சாரும் எனலாம். 19130 ஆம் ஆண்டில் வெளி வந்த அவரது மொழி நூலில், சொற்கள் பிறப்பு பற்றிப் பல ஆய்வுகளைச் செய்துள்ளார். உலகில் உள்ள எல்லாச் சொற்களும் "சுல்" என்னும் அடிப்படைச்சொல்லில் இருந்தே தோன்றியிருக்க வேண்டும் என்பது அவரது கருத்து.

சொல் :

"சொல்" என்பது பொருள் பயக்கும் இலக்கணத்தை அளவையாகக் கொண்டு வகுக்கப்பெறுவது என்று சில அறிஞர்கள் கூறுவர். மேலும், "சொல்லின் அடிப்படை வரைவிலக்கணமே பொருள் உணர்த்துவது" என்றும், "சொல் என்பது பொருள் தரக்கூடிய ஒரு கூறு" என்றும் கூறுவர். மேலும் சொல்லை ச்+ஒல் எனப்பிரித்து 'ச்' என்பதை 'நா' வாகவும் 'ஒல்' என்பதை 'ஒலி' யாகவும் கொண்டு, சொல் என்பதற்கு "நாவால் ஒலிக்கப் பெறும் தொடரிசை" என்பது பொருள் என்றெல்லாம் பல விளக்கங்கள் கூறப்படுகின்றன.

சொல்லை உணர்த்தும் பிற சொற்கள் :

கிளவி, மொழி, உருபன், அடிச்சொல், வார்த்தை, ஒட்டு நிலைச் சொல், தொடர்மொழி, தொகை, எழுத்து, பொருள், சொற்றொடர், ஒலியன், வாக்கியம், விகுதி என்பவை சொல்லை உணர்த்தும் பிற சொற்கள் ஆகும். மேலும், தமிழ்ப் பேரகராதியில் சொல் என்பதற்குப் பல விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன. அவை எழுத்தினோசைச் சொல், கட்டளை, கள், செந்நெல், செந்நெற்கதிர், செல்லென்னேவல், நெல், புகழ், பேச்சு, மொழி, வாக்கியம் என்பனவாகும்.

தொல்காப்பியத்தில் 'சொல்' கையாளப்பெறும் முறைகள் :

தொல்காப்யித்தில் 'சொல்' என்பது பல பொருட்களில் கையாளப்படுகிறது. "னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்" என்ற நூற்பாவில் 'சொல்' என்பது உருபனையும், தருசொல், வருசொல் ஆயிரு கிளவியும், என்ற

இடத்தில் அடிச்சொல் என்ற பொருளையும் 'பன்மை 'உரைக்கும் தன்மைச்சொல்லே'. என்னுமிடத்தில் ஒட்டுக்கள் என்ற பொருளையும் 'நிலனும், பொருளும், காலமும்' என்ற தொடரில் சொல் என்ற பொருளையும் தருகிறது என்பர்.

இவைத் தவிர 'சொல்' என்பது தொடர்மொழி என்ற பொருளிலும், தொல்காப்பியத்தில் பயன்படுத்தப் பட்டுள்ளதாகக் கருதுவர். "வண்ணச் சினைச் சொல்" என்பதற்கு உரையாசிரியர்கள் 'செங்கால்நாரை' என்பதனை உதாரணமாகக் கொடுத்துள்ளார்கள். இது ஒரு தொடர்மொழியே என்றும் கூறுவர்.

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்கிறது தொல்காப்பியம். எழுத்துக்கள் தனித்தோ அன்றித் தொடர்ந்தோ நின்று பொருள் உணர்த்துமாயின் அது 'சொல்' எனப்படும் என்பார் தொல்காப்பியர். இவர் 'சொல்' என்பதற்குப் பயன்படுத்தியுள்ள பொருளிலெல்லாம் இளம்பூரணர் 'சொல்' என்பதைப்பயன் படுத்தியுள்ளாரா? என்று நோக்கினால் இல்லை என்றே கூறலாம்.

தொல்காப்பியர் 'சொல்' என்பதைத் தனியுருபன், கட்டுருபன் ஆகிய இரண்டு பொருளிலும் கையாண்டுள்ளார். ஆனால் இளம்பூரணர் சொல்லுக்கு விளக்கம் தர முற்படுகையில் 'சொல்' என்பது 'எழுத்தொடு புணர்ந்து பொருள் அறிவுறுக்கும் ஓசை' என விளக்கம் கண்டார். திரு.பாலசுப்பிரமணியனின் 1981ஆம் ஆண்டு அகராதிப்படி தொல் காப்பியத்தில் 'கிளவி' என்பது கிட்டத்தட்ட 280 முறையும், சொல் என்பது 134 முறையும் மொழி என்பது 128 முறையும் கலைச்சொற்களாய் வந்துள்ளன என்பதை அறியமுடிகின்றது. திரு.திண்ணப்பன் அவர்கள், சொல்லதிகாரத்தில், கிளவி என்பது 7 பொருள்களிலும் மொழி என்பது 4 பொருள்களிலும் பயின்று வந்துள்ளதாகக் கருதுகின்றார்.

அதாவது, கிளவி என்பது வார்த்தை, அடிச்சொல், எழுத்து, ஒட்டு நிலைச்சொல், தொகை, சொற்றொடர், பொருள் என்ற 7 பொருள்களிலும், மொழி என்பது வார்த்தை, அடிச்சொல், ஒட்டுநிலைச்சொல், தொகை என்ற 4 பொருள்களிலும் வந்துள்ளது என்பது சான்றாகும்.

"பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லினாகும் என்மனார் புலவர்"

என்ற நூற்பாவழி தன்னின் வேறாகிய பொருளறியப் படுதலும், பொருளறியப்படாது அச் சொல் தானே அறியப்படுதலும் என்ற இரண்டும் சொல்லாகும்.

சான்றாக,

பண்டுகாடுமன், சாத்தன் வந்தான், உறுகால் என்பனவற்றால் பொருருணரப்பட்டவாறும், நீயென் கிளவி, செய்தெனச்சன், தஞ்சக் கிளவி, கடியன் கிளவி என்பனவற்றால் பொருளுணரப்படா அச்சொல் தாமே உரைப்பட்டுள்ளதையும் அறிய முடிகிறது.

சொல் பற்றிய உரையாசிரியர்களின் கருத்து

இளம்பூரணர் :

சொல் என்பது எழுத்தொடு புணர்ந்து பொருள் அறிவுறுக்கும் ஓசை என விளக்கம் கண்டார் இளம்பூரணர்.

நச்சினார்க்கினயர் :

'எழுத்தினான் ஆக்கப்பட்டு இருதிணைப்பொருள் தன்மையும் ஒருவர் உணர்வதற்குக் கருவியான ஓசையே சொல்' என நச்சினார்க்கினியர் கூறுகிறார்.

சேனாவரையர் :

"கிளவி, சொல், மொழி என்பன தொடக்கத்தில் ஒரு பொருட்கிளவி" எனச் சேனாவரையர் கூறுகிறார். அதாவது கிளவி என்பது பொருள் தரும் நிலையில் கிளக்கப்படுவனவாகும். ஓர் எழுத்தை மொழிப்படுத்துக் கூறினும் கிளவியாம் 'சொல்' என்பது பொருள் பயக்கும் இலக்கணத்தை அளவையாகக் கொண்டு வகுக்கப் பெறுவதாகும். மொழி என்பது எழுத்தை அளவையாகக் கொண்டு வகுக்கபெறுவதாகும் என விளக்கம் தருகிறார், சேனாவரையர்.

மொழி, சொல், கிளவி என்பவை வெவ்வேறு சிறப்புப் பொருளுடையவை எனினும் யாப்பினுள் ஒரு பொருட் கிளவி போல ஆளப்படும் என்று கூறுகிறார். இவர் சொல்லுக்கு விளக்கம் தர முற்படுகையில், எழுத்துக்கள் தனித்து நின்றும் தொடர்ந்து நின்றும் பொருளுணர்த்தும் இயல்பினவாயினும் தனித்து நிற்கும் எழுத்துக்கும், சொல்லில் தொடர்ந்து

நிற்கும் எழுத்துக்களுக்கும் இடையில் நுட்பமான வேறுபாடு உண்டு எனக்கூறுகிறார்.

தொல்காப்பியர் :

ஈற்றில் நின்றிசைக்கும் பதினோரெழுத்தும் என்ற நூற்பாவில் எழுத்து என்பதைச் சொல் என்ற பொருளில் தொல்காப்பியர் ஆண்டுள்ளார்.

நன்னூலார் :

எழுத்துக்கள் தனித்து நின்ற நிலையில் எவ்வெவ்விலக்கணங்களை உடையனவோ, அவ்வவ்விலக்கணங்களையே சொல்லாகும் போதும் பெறும் என்பர் நன்னூலார்.

தெய்வச்சிலையார் :

"எழுத்தினால் இயன்று பொருள் அறிவிப்பது சொல்" எனத் தெய்வச்சிலையார் கூறுகிறார். இவ்வாறு ஒவ்வொருவரும் தமக்கென 'சொல்' பற்றிய வரையறைகளைக் கூறியிருக்கின்றனர்.

தொல்காப்பியத்தில் கிளவி :

கிளவி என்பது தொல்காப்பியத்தில் (தொல்காப்பியம் முழுமையிலும்) வார்த்தை என்ற பொருளில் மிகுதியாக ஆட்சி பெறுகிறது. மொழி என்பது எழுத்ததிகாரத்திலும், 'சொல்' என்பது சொல்லதிகாரத்திலும், மிகுதியாக ஆட்சி பெற்றுள்ளது எனத் திரு.திண்ணப்பன் சுட்டிக்காட்டுகிறார். ஆயினும் சொல்லதிகாரத்தில் 'எழுத்து' என்பது விகுதி அல்லது ஒட்டுநிலைச்சொல் என்ற பொருளில் 2 தடவை வந்துள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும், சொல்லதிகாரத்தில் 'சொல்' என்பது 'உருபன்' என்ற பொருளிலும், வாக்கியம் என்ற பொருளிலும் ஆளப்பட்டுள்ளது.

சொல்லும் பொருளும்

'முந்நிலைக் காலமும் தோன்றும் இயற்கை
எம்முறைச் சொல்லும்'

என்ற நூற்பாவில் 'சொல்' என்பதற்குப் 'பொருள்' என்றே உரையாசிரியர்கள் கூறுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

'எடுத்த மொழி இனஞ்செப்பலும் உரித்தே' என்ற சூத்திரத்தில் 'மொழி' என்பது சொல்லைக் குறிப்பதாக உரையாசிரியர்கள் உரை எழுதியுள்ளதும் அறியத்தகுந்தது.

ஒருபொருளைக் கருதி உணர்வதற்கு அப்பொருளையே அடிப்படையாகக் கொண்டு சொற்கள் தோற்றுவிக்கப்படுதலின் பொருளைச் சுட்டாத வெறுமைச் சொல் ஒன்றில்லை என்பது நூலோர் முடிவாகும்.

'சொல்' என்பதற்குச்சமய ஆற்றலால் பொருள் உணர்த்தும்போது, சொல் இப்பொருளையுணர்த்துக, என இறைவன் ஆணையின் காரணமாகப் பொருள் உணர்த்தி வருகிறது என்பர்.

வாக்கியங்களும் தொடர்களும் பொருள் உடையதாகவும் பொருள் அற்றதாகவும் இருக்கலாம் எனக்கூறினாலும் சொற்கள் பொருள் உடையவை அல்ல என்று நாம் கூறுவதேயில்லை.

வருணனை முறை :

'சொல்' என்பது வடிவம், பொருள் என்று பிரிக்க முடியாத இரண்டு கூறுகளால் ஆனது. சொல் ஆய்வில் வடிவத்தை வைத்துக் கொண்டு பொருளை விளக்குவதா? பொருளை எடுத்துக்கொண்டு வடிவத்தை விளக்குவதா? என்பன போன்ற கேள்விகள் எழலாம். உரையாசிரியர்கள் பலரும் வடிவத்திலிருந்து பொருள் விளக்கப்பட்டுள்ளதாகவே குறிப்பிட்டுள்ளார்கள். தெய்வச்சிலையார் 'சொல், பொருள்' என்ற இரண்டையும்கொண்டு விளக்கியுள்ளார் மண்ணினால் இயன்றதோர் பூதம் எனவும், 'நிலம்' என்ற சொல்லின் தன்மையை ஆராய்ந்தால் அது பெயர்ச்சொல் என்றும் வழங்கப் பெறுவதாகத் தெய்வச்சிலையார் கூறுகிறார்.

சொல் பற்றிய மொழியாளர்களின் கருத்து :

சொல்லும் பொருளும் பிரிக்க முடியாதபடி சேர்ந்தே உள்ளதாக மொழியாளர்கள் கருதுவர். 'சொல்' என்பதற்கு அட்டரன்ஸ் (Uttarance) என்ற கலைச்சொல்லைப் பயன்படுத்துகிறார்கள். இச்சொல் வார்த்தையாகவோ, தொகையாகவோ, தொடராகவோ, வாக்கியமாகவோ இருக்கும் என்று குறிப்பிடுகிறார்கள்.

ஏனெனில் பேச்சு மொழியை எடுத்துக்கொண்டு ஆராய்கின்ற மொழி ஆராய்ச்சிக்குரியதரவில், 'உருபன், அடிச்சொல், தொடர், வாக்கியம்' போன்று எதுவும் இருக்காது. மொழி ஆய்வாளனே தன்னுடைய ஆய்வு வசதிக்காகதான் வரையறுத்த பொருளில் பயன்படுத்தும் அலகுகள் இவை என்பதனையும் புரிந்து கொள்ள வேண்டும். அட்டரன்ஸ் என்பதற்குத்தமிழில் 'கிளவி' என்ற கலைச் சொல்லைப்பயன்படுத்துவது பொருத்தமாக இருக்கும்.

சொல் பற்றி சில முரண்பாடுகள் :

சொல் என்பது, சொல் ஆய்வு ஆகி இலக்கண ஆய்வையும் குறிக்கிறது.

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்ற தொல்காப்பிய நூற்பா மூலம் எல்லாச் சொல்லும் பொருளைக்குறிக்குமே தவிர எல்லாச் சொல்லும் எல்லாப் பொருளையும் குறிப்பதில்லை. ஒரு குறிப்பிட்ட சொல், பல்வேறு சூழல்களில் பல்வேறு பொருளைக் குறிக்கும். எனவே, சொல்லும், பொருளும் ஒன்றுதான் எனக்கூற முடியாது.

சான்றாகப் 'பார்த்தல்' என்ற சொல்லை எடுத்துக்கொள்ளலாம். பார்த்தல் என்பது ஒரு சொல்தான். ஆனால், பல பொருளில் அச்சொல் கையாளப்படுகிறது. அவன் பார்வை சரியில்லை, அவன் பார்க்கிறதைப்பாரு, தொலைக்காட்சியைப் பார்க்கிறான், வெளியே வா பார்த்துக்கறேன், குழந்தையை பார்த்துக்கொள், பார்க்கலாம், பார்க்கலாம் என இவ்வாறு ஒரு சொல் பல பொருளில் வரும்போது, அச்சொல் வரும் சூழ்நிலையை வைத்துதான் பொருள் கூறமுடியும்.

முடிவுரை :

எல்லாச்சொற்களும் பொருள் குறித்தே வரும். அவ்வாறு வரும்போது, அச்சொல் தன் தகுதிப்பாட்டினையும் உணர்த்தும், பொருளையும் உணர்த்தும். அங்ஙனம் பொருள் உணாத்தும்போது வெளிப்படையாகவும், குறிப்பாகவும் உணர்த்தும், தமிழில் சொல் பற்றியும், சொல் வகைப்பாடு பற்றியும் இன்னும் தீவிர ஆராய்ச்சி நடைபெறவில்லை என்றே கூறலாம். தொல்காப்பியர் காலத்திற்குப்பிறகும் இலக்கண ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. ஆயினும் மொழிப்பொருட்காரணம் விழிப்பத் தோன்றா என்ற நூற்பாவிற்கிணங்க, சொல் என்பதோ, கிளவி மொழி, எழுத்து என்பதோ இன்றுவிரைகலைச்சொற்களாக உள்ளனவே தவிர நிலைபேறு அடையவில்லை என்பது கண்கூடு.

பார்வை நூல்கள் :

1. தொல்காப்பியம்
2. சொல்லியல் – சூ.இன்னாசி
3. சொல்லதிகார ஆராய்ச்சி (பகுதி-1)

வேளாண் பழமொழிகள்
"பலருடைய அனுபவ ஆய்வில் பிறந்த அறிவியல் உண்மை"

பி.பத்மா, எம்.ஏ., எம்.ஃபில், எம்.எட்.,
பொருளாதார விரிவுரையாளர்,
கருப்பண்ணன் மாரியப்பன் கல்லூரி,
முத்தூர் - 638 105.

பழமொழிகள் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் பண்பு பெற்றவை. பலரின் அனுபவத்திலும் அறிவிலும் பிறந்தவை. பழமொழிகள் அறிவிலிருந்து பிறந்ததா? இல்லை அறிவு பழமொழிகளிலிருந்து பிறந்ததா, என்ற ஆய்வு இன்னமும் உண்டு. ஆக, பழமொழிகள் நம் பண்பாட்டை உணர்த்தும் சிறந்த சான்று ஆகும்.

தொழிலைப் பெருமைப்படுத்திப் பேசும் பழமொழிகள் பல உள்ளன. அவற்றில் நம் நாட்டின் முதன்மைத் தொழில் மற்றும் உயிர்களுக்கு அடிப்படையான வேளாண் தொழிலைப் பற்றி வெளிப்படையாகவும், குறிப்பாகவும் கூறும் பழமொழிகள் பல உண்டு. அவற்றை இங்குக் காணலாம்.

மண்ணியல் :

மண்ணின் தரம், அதனைத் தரப்படுத்தும் விதம், மண்ணுக்கு ஏற்ற பயிர், பயிருக்குக்கேற்ற உரம் பற்றிய ஆய்வு செய்வதே மண்ணியலாகும். நிலத்தின் தரம், நிலத்திற்கேற்ற பயிர் தேடி விதைத்தல், உரம் இடுதல் பற்றிய பழமொழிகளாவன :

"நெருப்பு இருக்கிற காட்டை நம்பினாலும்,
நீர் இருக்கிற காட்டை நம்பக்கூடாது"
"மழையடிப் புஞ்சை, மதகடி நஞ்சை" – நிலத்தின் தரம்
"காணி தேடினும் கரிசல் தேடு"
"களர் முறிக்க வேப்பந்தழை"
"எள்ளும், கரும்பும் எடுக்கும் பயிராம்" – விதைத்தல் உரம்இடல்

நீர்வளம் :

நிலம் வளம் பெற நீர் வளம் மிகவும் தேவை. இயற்கையில் ஆதிக்கம் அதிகமான வேளாண் துறையில் நீர் வளம் மிகவும்

இன்றியமையாதது. இந்நீர் வளத்தை மிகச் சீரிய முறையில் பயன்படுத்தும் பல நூதன முறைகள் இருந்தும், மழைவளத்தை பெருக்கவும், மண் அரிப்பைத் தடுக்கவும் மரங்கள் வளர்க்கவேண்டும். இதை உணர்த்தும் பழமொழிகள்

"காடுகள் அழிந்தால் நாடு அழியும்"
"காடுகள் இருப்பின் நாடுகள் செழிக்கும்"
"மழைவளம் தானே நிலவளம் என்பர்".

பருவம் :

வேளாண் துறையில் காலநிலை அறிதல் மிகவும் அவசியம். இத்துறையில் ஏற்ற காலமறிந்து, நிலத்திற்கேற்ற பயிரிடுதல் மிக முக்கியம். இந்நிலையைத் தெளியப்படுத்துவன

"பருவத்தே பயிர் செய்"
"ஆடிப்பட்டம் தேடி விதை"
"ஆடி விதைப்பு, ஆவணி முளைப்பு"
"புரட்டாசி விதையாகாது, ஐப்பசி நடவாகாது"
"கார்த்திகைக்குப்பின் மழையில்லை, கர்ணனுக்கு பின் கொடையில்லை"
"பருவம் தவறினால் பயிர் செழிக்குமா"

உழவியல் :

பருவத்தில் பயிர் செய்தல், உழுதலின் முறை, விதைத்தல், நடுதல், களை எடுத்தல், வானிலை – முதலியன பயிரிடுவதற்கு ஏற்ற கட்டுக்கோப்புச் சாகுபடி குறிப்புகளைத் தருகின்றன. இவ்உழுதலின் சிறப்பையும், அதன் ஆய்வினையும் குறிக்கும் பல பழமொழிகள் உள்ளன. அவையாவன

"ஆறுநாள் நூறு உழவு உழுவதினும்,
நூறு நாள் ஆறு உழவு மேல்,"
"நன்செய்க்கு நாலுழவு, புன்செய்க்கு ஏழுழவு"
"கொள்ளுக்கு ஒருழவு, எள்ளுக்கு ஈருழவு"
"அகல உழுவதிலும், ஆழ உழுவது மேல்"
"பசுவுதத்தினும், பழம் புழுதி நல்லது"
"உழுது அலர்ந்தது பழுதாகாது"

"உரத்தை தள்ளும் உழவு" உழுதலின் மேன்மை
"பாழில் போட்டாலும் பட்டத்தில் போடு"
"அழிய உழுது, அடர விதை"
"களை பிடுங்காப் பயிர் கால் பயிர்"
"காரையும், எள்ளையும் கருதி பயிரிடு" – உழவியல் ஆய்வுகள்

விதையியல் :

பயிர் செழித்து வளர உரிய உயிர் விதைகளைத் தேர்வு செய்தல், அதைப் பதப்படுத்தும் முறை பற்றிக் கூறுவது – விதையியல். தற்பொழுது பல வகையான விதைகள் உரங்கள் இருக்கின்றன. அதை நூதன முறையில் ஆராய்ந்து, தெளிந்து பயன்படுத்திப் பயனடையலாம். ஆனால் முன்பு இத்தகைய வளர்ச்சியின்மையால் விதைகளைத் தாமே தெரிவு செய்வதும், தரப்படுத்துவதும், உலர வைப்பதும், பின் பதப்படுத்தி, காத்தும் வந்தனர். இதில் பளிச்சிடும் பழமொழிகள் :

"காய்ந்த வித்துக்குப் பழுதில்லை"
"சொத்தைப்போல வித்தைப் பேணு"

பயிரியல் :

இன்று பல வகையான பயிர் இனங்களும், விளைச்சலை அதிகப்படுத்தும் நவீன உரங்களும், நவீன முறைகளும் உள்ளன. ஆனால் முன்பு பயிர்களின் தரத்தையும், விளைச்சலையும் அறிந்து கொள்ளப் பல வகையான பயிர்களைப் பயிரிட்டு வந்தனர். அதில் எந்தப் பயிர் மிகுந்த விளைச்சலைத்தருகிறதோ அதையே தேர்ந்தெடுத்துப் பயிர் செய்து வந்தனர். இதைப் பின்வருவனவற்றில் காணலாம்.

"கதிருக்கு முந்நூறு நெல் இருந்தால் முழு விளைச்சல்"
"நெல்லுக்கு நேரே புல்"

நோயியல் :

பயிரைத் தாக்கும் நோய்களைப்பற்றியது. நோயியல் – இன்றுபோல் பல வகையான நோய்களும் பூச்சிக் கொல்லி மருந்துகளும் முற்காலத்தில் அதிகம் இல்லை. இருப்பினும், மக்கள் பயிரைத் தாக்கும், நோய்களைப் பற்றித் தெரிந்திருந்தனர் என்பதைப் பின்வரும் பழமொழிகளில் அறியலாம்.

"அழுகைத் தூத்தல் அவ்வளவும் பூச்சி"
"கீரைக்கு புழு வேரில்"
"ஆயிரம் கலம் நெல்லுக்கு ஓர் அந்து"

பயிர்ப் பாதுகாப்பு :

நல்ல விளைச்சல் பெறப் பயிர் பாதுகாப்பு மிகவும் அவசியம். இதற்கு ஆண்டவர் துணை வேண்டும் என்ற கருத்தை வெளிப்படுத்தும் பழமொழிகள்

"உள்ளூர் பெண்ணும், அயலூர் மண்ணும் ஆகாது"
"பயிர் பார்க்காமல் கெட்டது, மனைவி பேணாமல் கெட்டாள்"
"நட்டாலும் தில்லை நாயகனை நட வேண்டும்"

தோட்டவியல் :

பருவத்துக்கேற்ற காய்கறிகளைத் தேர்வு செய்தலும், பயிரிடுதலும், உயர் ரகங்களைக் கண்டு பிடித்தலும் பற்றியது தோட்டவியல். பளிச்சிடும் பழமொரிகள் :–

"ஆடி வாழை தேடிப் போடு"
"ஆடி அவரை தேடிப் போடு"
"இஞ்சி லாபம் மஞ்சளில்"

வேளாண் பொறியியல் :

வேளாண் துறையில் பயன்படுத்தும் கருவிகள், மண்வளம், நீர்வளம் மற்றும் தேன் பாதுகாப்பு, வேளாண்மைக் கட்டமைப்புகள், வேளாண் விளைபொருட்கள் பற்றிய ஆய்வு செய்வதாகும். தற்பொழுது, பசுமைப் புரட்சியின் விளைவால் அதிநவீன வேளாண் கருவிகள் உள்ளன. ஆனால் இத்தகைய வசதி பண்டைய காலத்தில் மிகக் குறைவாக இருந்தது. இருப்பினும் அவர்கள் பயன்படுத்திய கருவிகளைப் பற்றிய பழமொழிகள் பின்வருமாறு :

"கொம்பால் உழுது முண்டியால் மரமடி"
"நாட்டுக் கலப்பையில் நான்கு முறை உழு"

வேளாண் பொருளாதாரம் :

வேளாண்மை நம் நாட்டின் முதுகெலும்பு ஆகும். இத்துறையில் 75 சதவிகித மக்கள் ஈடுபட்டுள்ளனர். நாட்டு வருமானத்தில் இதன் பங்கு 32 சதவிகிதமாகும். பொருளாதார முன்னேற்றத்தில் வேளாண்மையின் பங்கு மிக முக்கியமானது. காரணம், மக்களுக்கு வேண்டிய அடிப்படை வசதியான உணவு, உடையை வழங்குகிறது. இதைப் பின்வரும் பழமொழிகளில் அறியலாம்.

"உண்ட உடம்பிற்கு உறுதி, உழுத நிலத்திற்கு நெல்லு"
"ஆள் பாதி, ஆடை பாதி"

அது மட்டுமன்றி, வேளாண் துறை பிற தொழில்களுக்கு தேவையான கச்சாப் பொருட்கள், தொழிலாளர்களையும், வழங்குவதுடன், அத்துறைகளுக்குச் சந்தையாகவும் விளங்குகிறது. அத்துடன் போக்குவரத்து, வங்கி, ஏற்றுமதி போன்ற பல துறைகள் வேளாண் துறையைச் சார்ந்துள்ளன.

வேளாண் பொருளாதாரம் என்பது பண்ணை நிர்வாகம். அதற்கான இடுமுதல், செலவு, வருவாய் வேளாண் விளை பொருட்கள், சந்தை நிலவரம், இத்துறைக்கு அரசு மற்றும் பிற நிறுவனங்கள் வழங்கும் நிதி உதவி மற்றும் அரசின் விவசாயக் கொள்கைகள் போன்றவையாகும். தற்போதுள்ள விவசாய விலைக்குழு, வேளாண் பெருளாதார முன்னறிவிப்புப் போல பண்டைய காலத்திலும் இருந்தது, என்பதை வெளிப்படுத்தும் பழமொழிகள்.

"வேலி ஒன்றுக்கு ஈரணை மட்டும் இரண்டு ஆளும்"
"வேலி ஒன்றுக்கு பன்னிரண்டு கலம் விரைப்பாடும்"
"கார்த்திகைக் கார் கடைவிலை, தைச் சம்பா தலை விலை"

விலை பற்றியது

"உழுதவன் கணக்குப் பார்த்தால் உழவுக்குக்கூட மிஞ்சாது"
"ஊண் மிச்சம் உழவில் இல்லை" வருமானம்

இதன் மூலம் உழவின் அனுபவம் தெளிவாகிறது. இருப்பினும் சான்றோர்கள் வேளாண் துறையைப் பெருமைப்படுத்தியே பேசி வந்தனர் என்பதை

"உழவற உழுதவன் ஊரில் பெரியவன்"
"ஏர் நடந்தால் பேர் நடக்கும்"
"ஏரை இழந்தோர் பேரை இழந்தோர்" – என்பன

உழவின் பெருமையை வெளிப்படுத்தும் பழமொழிகள் ஆகும்.

முடிவுரை :

பொருளாதார முன்னேற்றத்தில் முக்கியப் பங்கு வகிக்கும் வேளாண் துறையினை உயர்த்த வேண்டும். வளர்ந்த நாடுகளின் வளர்ச்சிக்கு வித்திட்டது வேளாண் துறையே. இதற்கு உழைப்பும், முயற்சியும் மிகவும் தேவை.

"இருந்த கால் மூதேவி, நடந்தகால் சீதேவி"
"இருந்தவன் எழுந்திருக்கிறதுக்குள்ளே நடந்தவன் நெடுந்தூரம்"
"தன் கையே தனக்குதவி"
"உழைப்பின்றி ஊதியமில்லை"
"உழைப்பே சிறந்த செல்வம்"

என்பன உழைப்பின் சிறப்பை உணர்த்துபவை. கல்வியைப்போல் உழைப்பையும் உழைப்பாளியிடமிருந்து பிரிக்க இயலாது. இத்தகைய உழைப்பால் தான் ஒரு மனிதன் மற்றொரு மனிதனை முந்திச் செல்ல முடியும். இவ்வளர்ச்சி நிலையானது. இக்கருத்தை இளைய சமுதாயம் உணர வேண்டும். படித்துவிட்டு வேளாண்துறையில் ஈடுபடுவதை இழிவாக எண்ணாது நவீன முறைகளை இத்துறையில் செயல்படுத்தி, பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி வகுக்கவேண்டும். இதனால் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு வழி வகுக்க முடியும். இத்துடன் இந்திய வேளாண் துறையில் ஓர் தன்னிகரற்ற நாடு என்ற நிலையை நிலைப்படுத்தவும் முடியும்.

பாரதிதாசனும் மார்க்சியமும்

தெ.திருஞானமூர்த்தி
முதுநிலை விரிவுரையாளர்,
க.செ.கல்லூரி,
மேலைச்சிவபுரி - 622 403.

பாவேந்நர் பாரதிதாசன் இந்திய விடுதலைக்கு முன்னும் பின்னும் வாழ்ந்த (29.4.1891 - 24.4.1964) ஒரு மகாகவியாவார். இவர் தம் கவிதைகள் பல்வேறு அரசியற் கோட்பாடுகளைச் சிறக்கப் பேசி நிற்கின்றன. கால மாற்றத்திற்கேற்ப இவர்தம் கவிதைப் பாடுபொருளும் மாறியிருக்கின்றது. பாரதிதாசனின் கவிதைப் பொருண்மைக்கு மார்க்சியம் சிறப்பான முறையில் பங்காற்றியிருக்கிறது. குடியரசு இதழிலும் சுயமரியாதை இயக்கத்திலும் மார்க்சியத்தை முன்னெடுத்துச் சென்ற சிறப்புக்குரியவர் ம.சிங்காரவேலர் ஆவர். குடியரசில் 1931, 1932, 1933 ஆம் ஆண்டுகளில் சிங்காரவேலர் எழுதிய நாம் வேண்டிய வேலை என்ன? எது வேண்டும் சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா? போன்ற தொடர் கட்டுரைகள் பாரதிதாசன் சிந்தனையை மிகுதியும் பாதித்தன. தந்தை பெரியார் ஈ.வெ.ராவின் மார்க்சியச் சார்புநிலையும் உருசியப் பயணமும் (13-2-1932 முதல் 19-5-1932 வரை) பாரதிதாசன் சிந்தனையை மேலும் மார்க்சியத்தின் பால் ஈர்த்தன.

'பாரதி பாட்டில் பற்றிய பொதுவுடைமைத்தீ' என்றன் பாட்டு நெய்யால், வளர்ந்து உழைப்பாளர் தம் உணர்வில் கலந்து[1] என்கிறார் பாரதிதாசன். எனவே பாவேந்தரின் பொதுவுடமை ஈடுபாட்டிற்கு பாரதியும் ஒரு காரணமாவார். "1930 க்குப்பின் நாட்டில் பொதுவுடைமைக் கருத்துக்களும் ஆர்வமும் வேகமாகப் பரவின. ஏகாதிபத்திய பொருளாதாரச் சுமையினால் நாட்டில் பொருளாதார நெருக்கடி அதிகமாகவும் அரசாங்க எதிர்ப்புணர்வுகளும் அதிகமாயின"[2] என்பர். இச்சூழலும் பாரதிதாசனுக்கு மார்க்சியத்தின் மேல் ஈடுபாட்டை மிகுவித்தது எனலாம்.

மார்க்சியப் புரிதலும் பாரதிதாசனும் :

பாரதிதாசன் தம் கவிதைகளில் சோசலிசம், கம்யூனிசம் இரண்டையும் தெளிவுபட விளக்கி வேறுபாட்டையும் நன்கு புலப்படுத்தியுள்ளார். 'இரண்டு கறவைகள் உன்னிடம் இருந்தால் ஒன்றை அயலானுக்களித்தல் சோசலிசம் என்றும் இரண்டு கறவைகளையும் ஆள்வார்க்கு விற்றுத் தேவைக்குப் பால் பெறல் கம்யூனிசம் ' என்றும் குறிப்பிடுகிறார்.

"பொதுஉடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்
புனிதமோ டதைஎங்கள் உயிரென்று காப்போம்"[4]

எனுமளவிற்குப் பாரதிதாசனின் மார்க்சியச் சார்புநிலை அமைந்திருந்தது.

முதலாளித்துவ சமுதாயத்தின் வணிகமுறை மக்களுக்கு எதிரானதாகும். எனவே அரசே வணிகத்தை நடத்த வேண்டும் என்கிறார் பாரதிதாசன்.

"தனியாரிடத்தில் வாணிகம் இருந்தால்
சரிவிலைக்குச் சரக்ககப் படுமா?"
. . . .
எள்முதல் அரசினர் கொள்முதல் செய்க
எப்பாங்கும் கடைவைத்து விற்பனை செய்க[5]

என்று குறிப்பிடுகிறார். இது கம்யூனிச அரசுக்கு முன் சோசலிச அரசு அமைய விரும்பிய பாரதிதாசன் எண்ணத்தைக் காட்டுகிறது.

'அறியாமை உணர்வு நீங்கி, புத்துணர்வு பெற்று முதலாளியத்தை வீழ்த்திப் பொதுவுடமை காணும் நாள் எந்நாளோ'[6] எனக் கனவு காண்கிறார். மேலும் 'விடுதலை என்பது தானமாய்ப் பெறும் பொருளன்று அது குருதி சிந்தி வெற்றியில் விளைவது'[7] என உணர்த்துகின்றார்.

வர்க்கப் போராட்டம் :

வர்க்கங்களாகப் பிரிந்து கிடக்கும் சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின் சார்பாய்க் குரல் கொடுப்பது ஒரு மார்க்சியக் கவிஞனின் தலையாய பணியாகும். இப்பணியைப் பாரதிதாசன் கவிதைகள் சிறப்பாக ஆற்றியுள்ளன. தோழரே மேகம் பொழிவதற்குள் வியர்வையைப் பொழிந்து இந்த மண்ணைச் செழிக்க வைத்தீர் ; காகம் விழிப்பதற்கு முன் நீவிர் விழித்துக் காட்டைக் காவல் காத்தீர்; உள்ளங்கால் வெள்ளெலும்பு தோன்ற உளைச் சேற்றை உழுது பயிரிட்டீர் ; காத்து ஆணும் பெண்ணுமாய் அறுவடை செய்தீர் ; இத்தனை பாடுபட்டும் கொழு குத்த நிலமுமின்றிக் கொத்தடிமையாய் வாழ்ந்தீர்; விவசாயத் தோழர்களே ஒன்றுபட்டு உரிமையை நிலை நாட்டப் புத்துணர்வு பெறுங்கள்[8] என்கிறார். இவ்வகையில் பாரதிதாசன் குரல் தொழிலாளர் வர்க்கத்தின் குரலாய் ஒலிக்கிறது.

தொழிலாளர் வர்க்க உணர்வு பெறுவதற்கும் மார்க்சிய இயங்கியலுக்கும் எதிரானது கடவுள். எனவே பாவேந்தர் அதனை எதிர்த்துப் பாடினார்.

"நடவுசெய்த தோழர்கூலி
நாலணாவை ஏற்பதும்
உடலுழைப்பி லாதசெல்வர்
உலகைஆண் டுலாவலும்
கடவுளாணை என்றுரைத்த
கயவர் கூட்டமீதிலே
கடவுள்என்ற கட்டறுத்துத்
தொழிலாளரை ஏவுவோம்"

என்கிறார்.

வர்க்க எதிர்ப்புணர்வை வளர்த்த பாவேந்தர் தொழிலாளர் வர்க்கம் ஒற்றுமை பெறவேண்டும் எனக் கருதினார். அதனால் 'கூடித்தொழில் செய்தால் செய்தொழிலில் முற்போக்கும் தொழிலாளர் வலிமையும் இலாபமும் பெறுவர்'[10] என உணர்த்துகின்றார்.

வர்க்க உணர்வூட்டல், வர்க்க உணர்வுக்குத் தடையானவற்றை எதிர்த்துப் போடுதல், வர்க்க ஒர்மை என்று மூன்று நிலைகளிலும் பாரதிதாசன் கவிதைகள் சிறப்பான பங்காற்றியிருக்கின்றன.

இயங்கியல் பார்வை :

இந்தப் பிரபஞ்சம் தானாக இயங்கிக் கொண்டிருக்கிறது. அதனை யாரும் இயக்கவில்லை. அது யாருடைய ஆணைக்கும் கட்டுப்பட்டு இயங்காது என்பது மார்க்சின் பிரபஞ்சம் பற்றிய இயங்கியற் கோட்பாடாகும். இயற்கையின் இவ்வியங்கு ஆற்றலே மனிதவாழ்வுக்கு அடிப்படை என்கிறார் பாரதிதாசன்.

"அணுத்தொறும் இயங்கும்அவ் வசைவியக்கத்தைத்
துணிப்பிலா இயற்கையின் தொழிலெனச் சொல்வர்
அழியா தியங்கும் அவ்வசைவே மக்களின்
தொழிலுக்கு வேரெனச் சொல்லினும் பொருந்தும்"[11]

என்பார்.

மொழி பற்றிய கோட்பாட்டிலும் பாரதிதாசன் ஓர் இயங்கியற் சிந்தனையாளராகத் திகழ்கிறார். 'ஆதியில் தோன்றிய மனித இனத்தின் கூட்டு முயற்சியே மொழி'[12] என விளக்குகிறார். மூட நம்பிக்கைச் சிந்தனைகளுக்கு எதிராக இயங்கியற் சிந்தனையைத் தமிழ் இலக்கியத்தில்

வைத்த பெருமை பாரதிதாசனையே சாரும். சிலம்பில் கண்ணகி தன் வலக்கையால் இடமுலை திருகி எறிந்தாள். மதுரை பற்றி எரிந்தது என்கிறார் இளங்கோ. ஆனால் பாரதிதாசன் கண்ணகி புரட்சிக் காப்பியத்தில் கண்ணகிக்கு ஏற்பட்ட துயர்கண்டு மதுரை நகர மக்களே அரண்மனையையும் நகரையும் தீயிட்டுக் கொளுத்தியதாகக் காட்டுகிறார்.

உலகப் பார்வை :

பாவேந்தர் பாரதிதாசனைக் காலச்சூழலோடு பொருத்திப் பார்க்கத் தவறும் பலர் அவரை ஒரு வகுப்புவாதக் கவிஞர் எனக் குற்றம் சுமத்தினர். இக்குற்றச்சாட்டிற்குப் பாவேந்தர் முழுமையும் பொறுப்பாக மாட்டார். உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என வர்க்க ஓர்மைக்கு அறைகூவல் விடுத்தார் மார்க்சு. ஆனால் பாரதிதாசனோ மானுடம் என்னும் ஓர்மைக்குள் உலகத்தையே அடக்கிப்பார்த்த ஒப்பற்ற கவிஞராவார்.

"தூயஉள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்
தொல்லுலக மக்களெலாம் 'ஒன்றே' என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! ஆங்கே
சண்டையில்லை தன்னலந்தான் தீர்ந்த தாலே"[13]

என உணர்த்துகின்றார்.

'வேற்றுமைக்குக் காரணங்கள் இனமோ, நிறமோ, மொழியோ அல்ல. வேற்றுமைக்குக் காரணங்கள் இவைதாம் எனில் மானுடம், மனிதன் எனும் சொற்கள் பொருளற்றுப் போய்விடும். எனவே வேற்றுமைக்குக் காரணங்கள் பொருளாதாரமும் கல்வியுமே ஆகும்'[14] என்கிறார் பாரதிதாசன்.

"அறிவை விரிவுசெய் அகண்ட மாக்கு !
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை !
மானிட சமுத்திரம் நானென்று கூவு !"[15]

என அறிவை விரிவாக்கி மக்கள் பொதுநோக்குப் பெறவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார்.

அமெரிக்கா வியத்நாமைப் பிடித்து அடிமையாக்கியபோது 'வியத்நாம் வீரம் அமெரிக்காவை இடுப்பொடித்துப் போடும்'[16] எனத் தொலைநோக்கோடு எச்சரித்தார். ஹிரோசிமா நாகசாகியில் அமெரிக்கா அணுகுண்டு வீசியதால் 'உலகைத் தீக்காடாக்கி உயிர்க்குலம் அழிக்கும் அந்நாட்டை ஒடுக்க வேண்டும்' [17] என்று கண்டித்தார்.

இனம், நிறம், மொழி, நாடு என்பன பாவேந்தரின் மானுடச் சிந்தனைக்கும் விடுதலைச் சிந்தனைக்கும் தடையாய் இல்லை என்பதனையே இவை விளக்கி நிற்கின்றன.

உழைப்பும் பாரதிதாசனும் :

விலங்கிலிருந்து மனிதனை வேறுபடுத்தும் ஒரு கூறாக மனிதனின் திட்டமிட்ட உழைப்பைக் கூறலாம். எனவே மனிதப் பண்புகளுள் ஒன்றான உழைப்பைத் தம் கவிதைகளில் உயர்த்திப் பேசுகிறார் பாரதிதாசன். 'ஈன்று புறந்தருதல் தாயின் கடன் என்றும் உழைத்தல் எல்லோர்க்கும் கடனென்றும்'[18] முழங்குகிறார். 'உழைக்காதவனை நோயாளி, ஊர் திருடி'[19] எனச் சாடுகின்றார்.

பாரதிதாசனின் பாத்திர உருவாக்கத்திற்கு மார்க்சின் உழைப்பாளர் சிந்தனை வலுவூட்டி இருக்கின்றது. கடல்மேல் குமிழிகள் என்ற கதைப்பாடலில் இடம் பெறும் அழகன், 'சடுகுடுவென்றே நெய்தீர்; உடுத்த உடையில்லை. ஆழ்கடலில் முத்தெடுத்தீர் ; குடிப்பதற்கும் கஞ்சியில்லை. புனலோடு குருதி சிந்திப் பயிரிட்டீர்; காத்த நெல் அரசன் வீட்டில்'[20] எனப் பேசுகின்றான். அழகனின் இப்பேச்சு அவனை உழைப்பாளர்களின் ஒப்பற்ற பிரதிநிதியாய் ஆக்குகிறது.

குறிஞ்சித்திட்டு மல்லிகை, புரட்சிக் கவி உதாரன் போன்ற பாத்திரங்களும் தொழிலாளர் சிறப்பைப் பரக்கப் பேசி நிற்கின்றன. பாரதிதாசனின் முற்போக்கான பாத்திரங்களின் படைப்பாக்க நெறிக்கு மார்க்சின் உழைப்பாளர் பற்றிய சிந்தனை மிகுதியும் உதவியிருக்கின்றது என்பதையே இப்பாத்திரப் பேச்சுக்கள் உணர்த்தி நிற்கின்றன.

பொதுவுடமை எதிர்ப்பும் பாரதிதாசனும் :

பாரதிதாசன் பொதுவுடமைக் கோட்பாட்டிற்கு என்றும் எதிரி அல்லர். இந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் நிலவிய அப்போதைய சூழல் அடிப்படையிலேயே இவர்தம் எதிர்ப்பு அமைந்தது. சீனா இந்தியா மீது படையெடுத்தபோது சீனப் பொதுவுடமையாளர்களையும் அவர்கள் நிலையை ஆதரித்த இந்தியப் பொதுவுடமையாளர்களையும் பாவேந்தர் எதிர்க்க நேரிட்டது. உருசியப் பொருளாதாரக் கொள்கையும் அங்கு நிலவியதாகக் கூறப்பட்ட பண்பாட்டு நிலையுமே பாரதிதாசனின் உருசிய எதிர்ப்புக்கான அடிப்படைகளாகும்.

தமிழ்நாட்டில் பாவேந்தர் காலத்தில் நிலவிய வருண முரண்பாட்டைப் பொதுவுடமை இயக்கத்தினர் குறைத்து மதிப்பிட்டனர். "சாதி எதிர்ப்பு, கடவுள் மறுப்பு, பார்ப்பனிய எதிர்ப்பு, வடக்கு எதிர்ப்பு போன்ற பகுதிகளைத் தழுவிய பகுதி இயக்கமாகவே திராவிடர் இயக்கம் பிறந்தது ; வளர்ந்தது. அத்தகைய பகுதிக் கோட்பாடுகளை மார்க்சியம் என்னும் முழுமைக் கோட்பாட்டையுடைய தமிழகப் பொதுவுடமை இயக்கம் விழுங்கி உள்ளடக்கியிருக்க வேண்டும். அவ்வாறு செய்திருக்குமாயின் அத்தகைய பகுதி இயக்கங்கள் யாவும் மார்க்சியம் என்னும் முழுமையுடன் ஒன்றுபட்டிருக்கும்"[21] என்பர். ஆனால் மேற்காட்டிய பகுதிச் சிக்கல்கள் எல்லாம் முக்கியமற்றவை என்றும் வர்க்கப் போராட்டம் ஒன்றுதான் எல்லாவற்றுக்கும் தீர்வு என்றும் அன்றைய பொதுவுடமை இயக்கத்தார் நம்பினர். இக்குரலை நாம் இலக்கியத் தளத்திலும் அடையாளம் காண முடிகின்றது. "பாரதிதாசனின் தமிழ்ப் பற்றும் ஜாதிய எதிர்ப்புணர்வும், நாஸ்திகப் பற்றும் திராவிட இனப்பற்றும் அவர் வர்க்கப் போராட்டத்தின் மீது பற்றுக் கொள்ள முடியாத நிலையை ஏற்படுத்தி விட்டன"22 என்பர். ஆனால் இக்கருத்து ஏற்புடையதன்று. தமிழ்த் தேசிய இன உணர்வும், சாதி எதிர்ப்பும், கடவுள் மறுப்பும் மார்க்சியத்திற்குப் புறம்பானவை அல்ல. பாரதிதாசனின் ஏகாதிபத்திய எதிர்ப்புக்குத் தடையாய் நின்றது திராவிட நாட்டுக் கோரிக்கையே. அதன் விளைவாய் எழுந்த ஆரியமாயையும் வடவர் எதிர்ப்புமே பாரதிதாசனை வர்க்கப் போராட்டத்தின் மீது பற்றுக் கொள்ள இயலா நிலையை ஏற்படுத்தின.

பாவேந்தரின் பார்ப்பனிய எதிர்ப்புணர்ச்சியைக் குறைத்து மதிப்பிட்ட பொதுவுடமை இயக்கத்தினர் அவரை ஓர் பூர்சுவாக் கவிஞர் என்றும் வருணித்தனர். இது பாவேந்தருக்கும் தமிழகப் பொதுவுடமையாளருக்குமான முரண்பாட்டை மிகுவித்தது.

பாரதிதாசனின் பார்ப்பனிய எதிர்ப்புக்குரல் தவிர்க்க முடியாத ஒரு வரலாற்றுத் தேவையாகும். ஏனெனில் சாதி அடுக்கு முறையை உள்ளடக்கிய இந்தியச் சமூகத்தின் சமூக அமைப்பு முறை தனித்தன்மையுடையது. இதில் பாவேந்தர் காலச் சாதி எதிர்ப்புக்குரல் அன்றைய ஒடுக்கப்பட்டோரின் உரிமைக் குரலாகும். இக்குரல் வர்க்கப் போராட்டம் என்ற அடுத்த நிலையை எட்டாமைக்கு இரண்டு காரணங்களைச் சுட்டலாம்.

1. பாவேந்தர் ஏற்றுக் கொண்ட தலைமை.
2. தமிழகப் பொதுவுடமை இயக்கத்தினருக்கும் அவருக்குமான முரண்பாடு.

1938க்குப் பின் பாரதிதாசன் கவிதைகளில் வர்க்க முரண்பாட்டை விட வகுப்பு முரண்பாடே முதன்மை பெறுகிறது. இதனால் இவர்தம் பிந்தைய கவிதைகள் சமூக சீர்திருத்தம் என்ற நிலையிலேயே நின்றுவிடுகின்றன. சமூகத்தில் நிகழும் ஒவ்வொரு மாற்றத்தையும் புரட்சி எனச் சுட்டுகிறார் பாவேந்தர். புரட்சி என்ற சொல்லை ஆழ்ந்த பொருளில் இவர் கையாளவில்லை. பாரதிதாசன், சமூகக் கொடுமைகளுக்கு எதிராக வர்க்கப் போராட்டத்தையும் புரட்சியையும் முன் வைக்காமல் கல்வியை முதன்மைப்படுத்துகின்றார்.

முடிவுகள் :

பாரதிதாசனின் பொதுவுடமைச் சிந்தனைகளுக்குச் சுயமரியாதை இயக்கத்தாரோடு பணியாற்றிய சிங்காரவேலரின் கருத்துக்கள், தந்தை பெரியார் ஈ.வெ.ரா.வின் பொதுவுடமைச் சார்புநிலை, பாரதியின் பொதுவுடமைச் சிந்தனைகள் ஆகியன காரணங்களாக அமைந்தன.

பாரதிதாசன் மார்க்சியத்தைத் தெளிவான முறையில் உணர்த்திருந்தாலும் அவர் அதனைவிடவும் தந்தை பெரியார் ஈ.வெ.ரா நெறியையே பெரிதும் பின்பற்றியுள்ளார்.

தமிழ்க்கவிதை உலகில் வர்க்கப் போராட்டத்தைத் தொடங்கி வைத்த பெருமைக்குரியவராகவும் இயங்கியல் பார்வையோடு கவிதை படைத்த சிறப்புக்குரியவராகவும் பாரதிதாசன் திகழ்கின்றார்.

ஒரு மார்க்சியக் கவிஞனுக்கான உலகப் பார்வையும் பாரதிதாசன் கவிதைகளில் காணப்படுகின்றது.

மார்க்சின் உழைப்பாளர் சிந்தனை பாரதிதாசன் கவிதைகளுக்கும் பாத்திரங்களுக்கும் வலிமை சேர்த்துள்ளன.

பாரதிதாசனின் வகுப்புப் பார்வைக்கான அடிப்படைக் காரணங்கள் இரண்டு. ஒன்று பொதுவுடமை இயக்கங்கள், மொழி, சாதி, கடவுள், மறுப்பு பார்ப்பன எதிர்ப்பு போன்ற பகுதிக் கோட்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்காமை. இரண்டு தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்களைப் பாரதிதாசன் தலைவராக ஏற்றுக் கொண்டமை எனல் தகும்.

சமூகக் கொடுமைகளுக்கு எதிராகப் புரட்சியைத் தீர்வாகச் சொல்லாமல் பாரதிதாசன் கல்வியைத் தீர்வாக முன்வைத்துள்ளார்.

மேற்கோள்கள் :

1. பாரதிதாசன், நாள் மலர்கள், 1978, ப.65
2. கோ.கேசவன், சுயமரியாதை இயக்கமும், பொதுவுடைமையும், 1990, ப.170.
3. பாரதிதாசன், நாள்மலர்கள், ப.20
4. பாரதிதாசன் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், 1991, ப.105.
5. மேலது, ப.141.
6. பாரதிதாசன், ஒரு தாயின் உள்ளம் மகிழ்கிறது, 1976, ப.76.
7. பாரதிதாசன், காதலா கடமையா, 1980, ப.14.
8. பாரதிதாசன் கவிதைகள், பக்.439-440.
9. மேலது, ப.90, 10. மேலது, 11. நாள்மலர்கள், ப.93.
12. பாரதிதாசன் அழகின் சிரிப்பு, 1992, ப.41.
13. பாரதிதாசன் கவிதைகள், ப.88.
14. பாரதிதாசன் வேங்கையே எழுக, 1978, ப.116.
15. பாரதிதாசன் கவிதைகள், ப.101.
16. நாள் மலர்கள், பக்.125-126.
17. மேலது, பக்.122-124.
18. பாரதிதாசன் கவிதைகள் ப.211.
19. மேலது, ப.270.
20. மேலது, ப.248.
21. குணா, மார்க்சிய இயங்கியல், பொதுமை வெளியீடு, 1978, ப.216.
22. பொன்னீலன், தற்காலத்தமிழ் இலக்கியமும் திராவிட இயக்கச் சித்தாந்தங்களும், 1988, ப.43.

“பாவேந்தரின் தொழிற்பாடல்கள்”

முனைவர்.வே.சா.அருள்ராஜ்
இணைப்பேராசிரியர்
இந்திய மொழிகள் பள்ளி
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர் - 613 005.

முன்னுரை :

கூடித் தொழில் செய்தல் வேண்டும்1 என்ற சிந்தனையாளராகிய நம் பாவேந்தர் வேறு நாடுகளிலிருந்து பல்வேறு பண்டங்கள் பெறுவதைக் காட்டிலும் நம் நாட்டிலே தொழில்கள் பல தோன்றி அவற்றை உற்பத்தி செய்ய வேண்டும்2 என்ற கொள்கையாளரும் ஆவார். கூடை செய்தல், காடு வெட்டுதல், உழவுத் தொழில், கப்பல் செலுத்துதல், பொன் எடுத்தல், இரும்பு உருக்குதல், இயந்திரம் செய்தல், ஆடை நெய்தல், நாற்று நடுதல், சுதை வேலைகள் செய்தல், கலங்கள் செய்தல், குடை செய்தல், நடையன்கள் செய்தல், கடல், காடு மலைகளில் செல்வங்களைச் சேகரித்தல், குப்பை எடுத்தல் போன்ற பல்வேறு தொழில்களைக் குறிப்பிட்ட பாவேந்தர்3 தொழில்கள் செய்யும்போது பாடும் பாடல்களாக ஏற்றப்பாட்டு, அறுவடைப்பாட்டு மற்றும் கதர் இராட்டினப்பாட்டு ஆகியவற்றைப் பற்றிக் கவிதைகள் இயற்றியுள்ளார். வேளாண்மைத் தொழிலே தொழில்கள் அனைத்திலும் முதன்மை இடத்தைப் பெறுவதால் பாவேந்தர் ஏற்றப்பாட்டு, அறுவகைப்பாட்டு ஆகியவற்றையும் சுதந்திர வேட்கை இவரது காலத்தில் மிக்கிருந்ததால் கதர் ராட்டினப் பாட்டையும் பாடி இருக்கவேண்டும் எனக் கருத வேண்டியுள்ளது. இவ்வகைப் பாடல்கள் நாட்டுப்புறப்பாடல்கள் வகையைச் சார்ந்தனவாகும். இப் பாடல்கள் இனிமையாக, எளிமையாக, நாவில் பிறந்து, காற்றில் மிதந்து, செவிகளில் உலவி கருத்தில் இனிப்பவையாகக் காணப்படுகின்றன. உணர்ச்சி, இசை, ஓசை, தாளக்கட்டு, சொல், தொடை, அழகு ஆகியனவும் இப் பாடல்களில் காணப்படுகின்றன. பொதுவாக, நாட்டுப்புறப்பாடல்கள் இலக்கண வரம்பிற்குள் அடங்காமலும் இருக்கும்.

உடல் உழைப்பு மிக்க வேலைகளாகிய ஏற்றம் இறைத்தல், அறுவடை செய்தல் போன்ற தொழில்களில் ஈடுபடும் தொழிலாளர்கள் வேலை செய்யும் வேளையில் தம் உடல் வேதனையை அறியாமல் இருக்கவும் தாம் செய்யும் தொழில்களில் தளராது இருந்து ஆர்வமுடன் முனைந்து ஈடுபடவும் அவர்கள் பாடும் பாடல்கள் மிக்க பயனுள்ளனவாகக் காணப்படும். பொதுவாக தொழிற்பாடல்களில், அன்பு மலர்வதையும் பாசம் பொங்குவதையும் உழைப்பின் ஆர்வம் மிகுவதையும் இன்ப துன்பங்கள் வெளிப்படுவதையும்

ஆசாபாசங்கள் தோன்றுகின்ற நிலையையும் வெறுப்புகள் புலனாவதையும் காணலாம். பாவேந்தர் பாடியிருக்கும் வேளாண்மைத் தொழிற் பாடல்களாகிய ஏற்றப்பாட்டு மற்றும் அறுவடைப்பாட்டுக் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

பாவேந்தரின் வேளாண்மைப் பாடல்கள் :

தொழிற்பாடல்களில் பயிர்த்தொழில் பாடல்களே அதிகமாக வழக்கில் இருந்து வருகின்றன. அவற்றுள் நீர் இறைத்தல், ஏர் பூட்டுதல், ஏர் உழுதல், விதை விதைத்தல், நாற்று நடுதல், களை எடுத்தல், கதிர் அறுத்தல் போன்ற பாடல்கள் காணப்படுகின்றன. இவற்றில் மிகவும் முக்கியமான பாடல்களாகப் பாவேந்தர் கருதிப் பாடியிருக்கும் பாடல்கள் நீர் இறைத்தலாகிய ஏற்றப்பாட்டு மற்றும் கதிர் அறுத்தலாகிய அறுவடைப்பாட்டு ஆகியனவாகும்.

நீர் இறைத்தல் பொழுது விடிவதற்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டு விடிந்து பத்து நாழிகை வரையில் நடைபெறும். இந்நெடிய நேரம் தெரியாமலிருக்கவே இப்பாடல்கள் பாடப்படுகின்றன. இப் பாடல்கள் பெரும்பாலும் கால நீட்டிப்பிற்கேற்ப நீளமான பாடல்களாகவே காணப்படும். ஏற்றம் அல்லது கபிலை போன்றவற்றின் துணையால் கேணி முதலிய நீர் நிலைகளிலிருந்து நீர் இறைக்கும் பணியில் ஈடுபடுவோர் பாடும் பாடல்களே ஏற்றப்பாட்டுகள் எனப்படும். வயலில் அறுவடை நிகழும்போது பாடப்படும் பாடல்கள் அறுவடைப்பாட்டுகள் எனப்படும்.

ஏற்றப்பாட்டு :

"ஏற்றப்பாட்டிற்கு எதிர்பாட்டில்லை" என்பது பழமொழி. இப்பழமொழியின் வாயிலாக ஏற்றப்பாட்டின் பெருமையை உணர முடிகின்றது. ஆழமான கேணிகளில் கபிலை அமைத்து நீர்ச்சால்களைக் கயிறுகளில் கட்டி, மாடுகளின் துணையோடு இறைப்பது என்றும் கவை மரத்தை நட்டுக் குறுக்கே நெருங்கக் காலமைத்து அதன் மேல் ஒருவர் முன்னும் பின்னும் நடந்து செல்வதனால் நீர்ச்சாலில் நீர் முகப்பது என்றும் ஏற்றம் பல வகையில் அமையும். பாரதியார் ஏற்றப்பாட்டின் பெருமையைக் குறித்துக் கூறும்போது தாம் நெஞ்சைப் பறிகொடுத்த பாடல் வகைகளுள் ஏற்றப்பாட்டும் ஒன்றாகும் எனத் தம் குயிற்பாட்டில் கூறியிருப்பதைக் காணலாம்.

பாடும்முறை :

ஏற்றப்பாட்டு பாடும் விதம் சுவையானது. கீழே சாலைப் பிடித்திருப்பவன் பாட்டின் ஒரு வரியைச் சொல்ல அவ்வரியை மேலே ஏற்றத்தில் ஓடுபவர்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து பாடுவார்கள். ஒரே வரி 2, 3 முறை திரும்பத் திரும்பப் பாடப்படும். பாட்டின் அடுத்த வரியைக் கீழே உள்ளவர்கள் பாடுவார்கள்.

ஏற்றப்பாட்டின் அமைப்பும் பொருண்மையும் :

ஏற்றப்பாட்டு தொடக்கத்தில் கடவுள் வாழ்த்தினைக் கொண்டதாக அமையும். பாவேந்தர் தம் ஏற்றப்பாட்டில் முதன் முதலாகச் சூரியனை வாழ்த்துவதைக் காணலாம்.

"ஓங்கு கதிர் வா வா – நீ
ஒன்றுடனே வாழி
. . . . . .
முந்திய கருக்கல் – எந்த
மூலையிலும் இல்லை
சந்து பொந்தில் எங்கும் – உன்
தங்க வெய்யில் கண்டோம்
இந்த நன்மை செய்தாய் – நீ
. . . . . . வாழி"

(பாரதிதாசன் கவிதைகள் 3 : 5 : 1, 2, 11 - 16)

அடுத்து, திராவிட நாட்டினை வாழ்த்துகிறார். திராவிட நாட்டின் சிறப்பு வர்ணிக்கப்படுகிறது. திராவிட நாட்டின் வளம், சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் ஆட்சி, காவிரியின் சிறப்பு, கனிம வளச்சிறப்பு, வெளிநாட்டு ஏற்றுமதி ஆகியன எடுத்துரைக்கப்படுகின்றன. திராவிடர் கலை ஒழுக்கம் குறித்துக் கூறும்போது கடவுள் ஒன்றே என்றும் அவருக்கு உருவமில்லை என்றும் கோயில்களில் கடவுள் குடியிருப்பதில்லை என்றும், மதப்பாகுபாடு வேண்டாம் என்றும் காணிக்கைகளைப் படைக்கவேண்டாம் என்றும் மக்கள் உயர்வு தாழ்வு பார்க்காமல் சாதிப் பாகுபாடின்னிற வாழவேண்டுமென்றும் அறநூலாகிய திருக்குறளைப் படிக்கவேண்டுமென்றும் ஆணுக்கும் பெண்ணுக்கும் நீதி ஒன்றே என்றும் பொறாமை, பேராசை, கோபம் ஆகியவற்றை நீக்க வேண்டுமெனவும் ஊருக்கும் நாட்டுக்கும் வீட்டுக்கும் உழைக்கவேண்டும் என்றும் காதல் மணம் புரிய வேண்டுமென்றும் திராவிடத்தையும் தமிழையும் காப்பாற்ற வேண்டுமென்றும் ஏற்றப்பாட்டில் பாவேந்தர் கூறகிறார்.

பெண்களுக்குக் கூறும் அறிவுரைகளும் இப்பாட்டில் இடம்பெற்றுள்ளதைக் காணலாம். நல்லொழுக்கம் வேண்டும், பொய் உரைத்தல் வேண்டாம், கல்வி கற்றல் வேண்டும் நன்றி மறவாமை வேண்டும். இன் சொல் கூறவேண்டும். தொண்டு செய்ய வேண்டும். பகுத்தறிவைப் போற்றவேண்டும். சினிமாவில் சேர்ந்து தீமை அடைய வேண்டாம் என்கிறார். மேலும்,

"கூட்டி வைத்த வீட்டின் – நல்ல
குடும்ப விளக் காவாய்"
"குழந்தை குட்டி பெற்று – நாம்
குறை தவிர்க்க வேண்டும்"
"விட்டுப் பிரியாதே – எந்த
வேளையிலும் மாதே"

எனப் பல நல்ல கருத்துக்களைப் பாவேந்தர் கூறியிருப்பதைக் காணலாம்.

நல்ல உணர்ச்சி இசை, ஓசை, தாளக்கட்டு, சொல், தொடை, அழகு ஆகியனவற்றையும் இவ் ஏற்றப்பாட்டில் காண முடிகின்றது.

"சோற்றை மறந் தேனே – அடி
தூக்க மில்லை மானே !
உன் நினைப்புத் தானே – அடி
ஊற் றெடுத்த தேனே !
என்னைக் கொல்லு தேடி – அடி
ஏதுக் கிந்த மோடி?
அன்ன நடை யாளே – நல்ல
அச்ச இடை யாளே
துள்ளு வதென் ஆசை – அடி
துடித்த தடி மீசை"

(பாரதிதாசன் கவிதைகள் 3 : 5)

பாவேந்தரின் ஏற்றப்பாட்டு மிக நீண்ட பாடலாகவே காணப்படுகிறது. காதல் சுவையும் இப் பாடல்களில் இடம் பெறுவதைக் காணலாம்.

"ஊறு தடி அன்பும் – பெண்ணே
ஏங்கிடுதே இன்பம்"

பாவேந்தர் ஏற்றப்பாட்டின் வாயிலாகச் சமூகத்திலுள்ள மூடப்பழக்கங்களைச் சாடுவதோடு பல்வேறு அறிவுரைகளை மக்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கில் உணர்ச்சி ததும்பும் விதத்தில் காதல் சுவையோடு ஓசை நயத்துடன் கூறியிருப்பது பாராட்டுதற்குரிய ஒன்றாகும்.

பாவேந்தர் பகுத்தறிவுச் சிந்தனையும் மூட நம்பிக்கையும் எதிர்ப்புணர்வும் கொண்டவராகையால் இறைவனை வேண்டும் கடவுள் வாழ்த்து மரபை மாற்றிச் சூரியனையும் திராவிட நாட்டையும் இறைவனாகக் கருதி வாழ்த்தக் காணலாம். தொழிற் பாடலானாலும் பல பகுத்தறிவுச் சிந்தனைகளையும் சமுாய நலச் சிந்தனைகளையும் வெளிப்படுத்தக்காணலாம்.

அறுவடைப்பாட்டு :

வயலில் அறுவடை செய்யும் ஆண்களும் பெண்களும் சேர்ந்து பாடும் பாட்டு அறுவடைப் பாட்டாகும். ஆண்களும் பெண்களும் சுறுசுறுப்பாக அறுவடை வேலையைத் தொடங்குவர். வரிசையாக வயலில் இறங்கி நிரை நிரையாகச் சென்று அரிவாளால் கதிர்களை அறுக்கும்போது இப் பாடல் பாடப்படுகிறது. பாவேந்தர் அறுவடைப் பாட்டை,

"நாட்டு மாதரே – அறுவடைப்
பாட்டுப் பாடுவோம்"

என்று தொடங்குகிறார். இப் பாட்டில் நெற்கதிர்கள் தலை சாய்ந்து நிற்பது குறித்தும் அதனால் வீட்டில் செல்வம் மிகுதல் பற்றியும் களத்தில் கதிர்க் கட்டுகளைச் சேர்ப்பது பற்றியும் காதல் சுவையுடன் பாடியுள்ளார். இப்பாடல்களில் ஒருவரை ஒருவர் கேலி செய்து பாடுவது மரபு. இது அவர்களுக்கு உற்சாகத்தையும் புதியதொரு விறுவிறுப்பையும் ஏற்படுத்தும்: இதனை ஆண் பெண் ஏசல் என்றும் அழைப்பர். இப்பாடல், அகச் சுவை மிக்குக் காதல் விளையாட்டுப் பாடல் போன்று தோன்றும். இன்பச் சுவையைக் குறிப்பிடப் பாவேந்தர் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

"கட்டடிக்கும் ஆளும் தோளும்
பட்டாளந் தானோ – அவர்
காதலிமார் ஆசையோடு
தொட்டாலும் தேனோ"

(பாரதிதாசன் கவிதைகள் 3 : 19 : 16 - 20)

முடிவுரை :

சமுதாய நலம், பகுத்தறிவுச் சிந்தனை, மூட நம்பிக்கை ஒழிப்பு, சாதி வேறுபாடின்மை, உழைப்பைப் போற்றுதல் தனி மனித மேம்பாடு, பெண்கள் முன்னேற்றம் முதலான பல்வேறு புரட்சிச் சிந்தனைகளைக் கொண்ட பாவேந்தர் தம் கருத்துக்களைப் பாமர மக்களிடமும் கற்றவர்களிடமும் எடுத்துக் கூறப் பாமர மக்களால் அன்றாடம் பாடப்பெறும் அறுவடைப்பாட்டு, ஏற்றப்பாட்டு போன்ற நாட்டுப்புறத் தொழிற்பாடல்களை இலக்கிய உத்தியாகக் கையாண்டுள்ளார் எனக் கருதலாம்.

அடிக்குறிப்புகள்

1. கூடித் தொழில் செய்தோர் கொள்ளை லாபம் பெற்றார்
(பாரதிதாசன் கவிதைகள் 1 : 46 : 1)

2. "தமிழர் நாட்டினில் பலபல பொருள்கள்
சார்ந்திட்டதில் என்ன பயன்?
சுமைகொள் தேவைகள் ஒரு நொடியில் பெறத்
தோன்ற வேண்டும் நாட்டிலே தொழில்"
(பாரதிதாசன் கவிதைகள் 4 : 95 : 5 - 8)

3. கூடை செய்தல் (1 : 41 : 21 ; 1 : 46 : 29), காடு வெட்டுதல் (1 : 47 : 1) ; உழவுத்தொழில் (1 : 47:2) ; கப்பல் செலுத்தல் (1 : 47 : 12) ; பொன் எடுத்தல் (1 : 47 : 14); இரும்பு உருக்குதல் (1 : 47 : 15) இயந்திரம் செய்தல் (1 : 47 : 16) ஆடை நெய்தல் (1 : 47 : 17) நாற்று நடுதல் (1 : 47 : 18) சுதை வேலைகள் செய்தல் (1 : 47 : 19) குடை செய்தல் (1 : 47 : 20) கலங்கள் செய்தல் (1 : 47 : 21) நடையன்கள் செய்தல் (1 : 47 : 24)காடு, கடல், மலைகளில் செல்வங்களைச் சேகரித்தல் (1 : 47 : 29) குப்பை எடுத்தல் (1 : 47 : 31)அடைப்புக்குறிக்குள் போடப்பட்டிருக்கும் எண்களில் முதல் எண் பாரதிதாசன் கவிதைகளின் தொகுதியையும் இரண்டாம் எண் பாடலையும் மூன்றாம் எண் வரியையும் குறிக்கும்.

துணை நூற்பட்டியல்

1. அழகப்பன், ஆறு ; 1980 நாட்டுப்புறப்பாடல்கள் திறனாய்வு,
கழக வெளியீடு, சென்னை.
2. வளவன், சா ; 1985 நாட்டுப்புறவியல் கட்டுரைகள்
மைதிலி பதிப்பகம், சென்னை.

3. பாரதிதாசன் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1994.

4. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி 6, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். 1988.

வில்யாழ்

வா.கோ.கிருஷ்ணமூர்த்தி
B-3, கம்பர் தெரு,
திருநகர், மதுரை - 6.

முன்னுரை :

பேரியாழ், சீரியாழ், வில்யாழ் எனும் பெயர்கள் சங்க நூல்களில் காணப்படுகின்றன. காப்பியங்களில் செங்கோட்டியாழ், சகோடயாழ், மகரயாழ் எனும் பெயர்களும் அதன்பின் வந்த நூல்களில் யாழ் எனும் வருமொழி சேர்ந்த பல பெயர்கள் கருவி குறித்தும் கூறப்பட்டுள்ளன.

சங்ககாலத்திலும் காப்பியகாலத்திலும் யாழ்ப்பெயர்கள் கருவி குறித்துக் கூறப்படவில்லை. இசையொலிகளையும் (யாழொலி/நரம்பு வரிசை) இசை வகைகளையும் குறிப்பிட ஆக்கப்பட்ட இப்பெயர்கள் இவ்வகை இசைகளை எழுப்ப அமைக்கப்பட்ட இசையொலி வரிசையையுடைய கருவிக்கும் ஆகிவந்தது. ஆயின் யாழ் எனும் வருமொழி சேர்ந்த பெயரெல்லாம் கருவி குறித்தது என அண்மைக் காலத்தோர் எண்ணியதால் அச்சொல் கூறி விளக்கப்பட்ட கருத்தையெல்லாம் அறியமாட்டாத நிலை நீடிக்கின்றது. பாலை நிலத்தவர் இசைப்பது பாலையாழ்க்கருவி, குறிஞ்சி நிலத்தவர் இசைப்பது குறிஞ்சியாழ்க்கருவி என நான்கு திணைப்பெயர்கள் சேர்ந்த யாழ்ப்பெயர்கள் நான்கு நரம்பிசைக் கருவிகள் என இன்றும் பலர் கூறியும் எழுதியும் வருதல் காணலாம். தாரம் (நி) – உழை (ம), உழை (ம) – குரல் (ச), குரல் (ச) – இளி (ப), இளி (ப) – துத்தம் (ரி) ஆகிய நரம்புகளின் ஒலி உறவினை விளக்க வந்தவை பாலையாழ், குறிஞ்சியாழ், மருதயாழ், நெய்தல்யாழ் என்பவையாகும் என்றும் பேரியாழ், சீரியாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ், மகரயாழ் என்பன சுர ஒலி வரிசை குறித்து அதனால் அவ்வரிசைகளில் நரம்புகளமைக்கப்பட்ட அல்லது அமைவதாகக் கொள்ளப்பட்ட கருவிகளைச் சுட்டியது என்றும் முன்பு பல கட்டுரைகளில்[1] விளக்கப்பட்டுள்ளது. இக்கட்டுரையில் வில்யாழ் பற்றி விளக்கப்படும்.

---

1. சென்னை சங்கீத வித்வத்சபை ஜர்னல், 64 பக். 116-146. 1993
   செந்தமிழ், 89 (3,4) பக். 1-14, 1-15. 1995
   செந்தமிழ், 91 (6,7) பக்.240-248, 269-278. 1997

வில்யாழ் பற்றிய குறிப்பு பெரும்பாணாற்றுப்படையில் (வரி 179-184) காணப்படுகின்றது. வேறெவ்விலக்கியமும் வில்யாழ் பற்றிக் கூறவில்லை. குமிழ், புழற்கோடு, மரற்புரிநரம்பு, வில்யாழ் எனும் சொற்கள் அவ்வரிகளில் காணப்படுவதால் குமிழமரத்தின் புழலுடைய கொம்புகளை வில்போல் வளைத்து மரல் நாரினால் புரிக்கப்பட்ட நரம்புகளை வெவ்வேறு அளவுகளில் ஒவ்வொரு வில்லிலும் கட்டி அவ்வாறு பல வில்களை அடுக்கிச் சேர்த்து அந்நரம்புகளைத் தெறித்து இசையெழுப்புமாறு செய்யப்பட்டது வில்யாழ் எனக்கூறி விபுலானந்தர்[2] படமும் இட்டுக் காட்டியுள்ளார். பல வில்கள் ஒன்றாகச் சேர்த்துக்கட்டியது என்று பொருள் கொள்ளுமாறு இவ்வரிகளில் யாதும் கூறப்பட்வில்லை. நரம்புகள் வெவ்வேறு அளவுகளில் இருந்திருக்குமானால் பல வில்களில் வில்லுக்கு ஒன்றாக நரம்புகள் கட்டப்பட்டிருக்கத் தேவையில்லை.

பத்தர், வறுவாய், மருப்பு, ஆணி, திவவு, பொன்வார்ந்தன்ன புரியடங்கு நரம்பாகிய மெட்டுக்களின் தொடையமை கேள்வி இவை கொண்ட பேரியாழ்க்கருவியும் சீரியாழ்க் கருவியும் ஆக்கப்பட்டிருந்த அதே காலத்தில் உருவம், உறுப்புக்கள் செயற்றிறன் இவற்றில் மிகப் பின்தங்கியதாகக் காணப்படும் இத்தகைய (வில்யாழ்) கருவியொன்று ஆக்கப்பட்டிருக்காது என்பதில் எவ்வித ஐயப்பாடும் கொள்ள முடியாது. பெரும்பாணாற்றுப் படையில் கூறப்பட்டுள்ள வில்யாழ் அறிஞர்களால் கற்பனை கலந்து கருவி என விளக்கப்பட்டுள்ளது என்பது அவ்வரிகளின் சொல்லுக்குச் சொல் பொருள் கொண்டு அதனை அங்கு கூறப்பட்டுள்ள இசைக் கருத்தோடு பொருந்திக் காணும்போது அறிய முடிகின்றது. பல அறிஞர்கள் கருதி வருவது போல் வில்யாழ் என்பது யாழ்க்கருவியல்ல ஆதலின் நரம்பிசைக் கருவி எனக் கருதி அறிஞர்கள் கூறிய எக்கருத்தையும் அவர்கள் முழுமையொடு விளக்கிக் காட்ட முடியாததில் வியப்பொன்றுமில்லை.

வளைந்தது வில் (வில் மாடம் என்றது காண்க) எனப்படுவதால் வளைந்த யாழ் (இசையொலி வரிசை) வில்யாழ் ஆயிற்று. யாழ்க்கருவியில் சரிகமபதநி எனும் வரிசையிலும் பதநிசரிகம எனும் வரிசையிலும் நரம்புகளை அமைத்துக்கட்டி இசைக்கலாம். இதன் காரணமாகவே 'ச' வும் 'ப' வும் தகைப்பிலமையும் சுரம் (மேருவில் அமையும் சுரம்/ அசல சுரம்) எனப்பட்டன. சிலப்பதிகாரத்தில் இது பண்மொழி நரம்பு (பண் = நிலையானது, ஆதாரமானது, அசையாதது) என்றும் மற்ற ஒலிகள் புரிநரம்பு (அசையக்கூடிய நரம்புகள் / ஒலிகள்) எனவும் கூறப்பட்டது.

---

2. யாழ் நூல், கரந்தைத் தமிழ்ச் சங்கம். பக். 22, 1947.

விரற்றொழிற்றிறன் கருதிக் குழலில் நரம்புகள் மபதநிசரிக என வைக்கப்பட்டுள்ளன. இதனின்று சரிகமபதநி எனற நிரலைத் தேர்ந்தெடுத்து அவற்றின் மூலம் தொன்று ஒழுகுமரபு இசையையும் (ஷட்ஜக்கிராம நிறங்கள்) பதநிசரிகம எனும் நிரலைத் தேர்ந்தெடுத்து அதனை சரிகமபதநி எனக் கருதி இயக்கி வம்புறுமரபு இசையையும் (மத்திமக் கிராம நிறங்கள்) எழுப்புதல் வேண்டும். சரிகபதநி என்ற வரிசை செங்கோட்டியாழ் / பேரியாழ் என்றும் பதநிசரிகம என்ற வரிசை சகோடயாழ் / சீரியாழ் என்றும் கூறப்பட்டது போல் குழலில் அமையும் மபதநிசரிக [3] எனும் நிரல் வளைந்த கர வரிசை, வில்யாழ் எனப்பட்டது.

பெரும்பாணாற்றுப்படையில் வில்யாழ் பற்றிக் கூறப்பட்டுள்ள வரிசைகளுக்கு உரை எழுதும்போது உரையாசிரியர்கள் இசைக் ருத்தை விடுத்து இலக்கியம் சார்ந்து பொருள் கூறியுள்ளதால் கருந்துளைக்குழல், குறிஞ்சியாழ், மரற்புரிநரம்பு, வில்யாழ், பல்காற்பறவை, அதன் கிளை இவற்றையெல்லாம் உருத்திரங்கண்ணனார் எதற்காகக் கூறினார் என்பதை விளக்க முடியவில்லை. இவ்வரிகளில் பொதிந்துள்ள மையமான இசைக்கருத்தைப் பெற்று மற்றவரிகளின் பொருளை அதனோடு இணைத்தால் தொடர்ச்சியான பொருளும் இளந்திரையின் புகழை உருத்திரங்கண்ணனார் எவ்வாறு பாடினார் என்பதும் விளங்கும். அதனை இங்கு காண்போம்.

கருத்துரை

இடையனின் தோற்றமும் அவன் செயலும்

தொடுதோல் மரீஇய வடுவாழ் நோனடி
விழுத்தண்டு ஊன்றிய மழுத்தின் வன்கை
உறிக்கா ஊர்ந்த மறுப்படு மயிர் சுவல்
மேம்பால் உரைத்த ஓரி, ஓங்கு மிசைக்

3. மபுதநிசரிக எனும் நிரல் மகரயாழ் என்று சிலவிடங்களில் கூறப்படும். இம்மகரயாழும் வில்யாழும் வெவ்வேறானவை. சரிகபதநி சரிகமபதநி என்று யாழில் நிரல்படும் இருதான நிலைகாட்டும் கோவையை அதனின்று வம்புறுமரபு இசை எழுப்பும்பொருட்டு இளியைக்குரலாகக் கருத இந்நிரல் மபதநிசரிக மபதநிசரிக என்றாகி நிற்கும். இது குரல் உழையாகி நிற்கின்ற 'ம' கர யாழ் ஆகும். ஆனால் குழலில் உள்ள மபதநிசரிக என்பது குரல் உழையாகக் கருதப்பட்ட நிரலல்ல. உண்மையான பேரியாழ் அலகளவுகளிலுள்ள மபதநிசரிக ஆகும்.

கோட்டவும் கொடியவும் விரைஇ காட்ட
பல் பூமியடைந்த பாடலைக்கண்ணி
ஒன்றமர் உடுக்கை கூழ் ஆர் இடையன்
கன்றமர் நிரையொடு கானத்து அல்கி – பெரும்பாண். 169 - 176

வடுக்கள் நிறைந்த வலிமை மிக்க கால்களையும், பெரிய ஊன்றுகோலைப் பற்றியுள்ள வலிய கைகளையும் பளு மிக்க பொருட்களை உறிக்காவாகக் கட்டித் தூக்கிச் சென்றதால் மயிற் சுருள்கள் தேய்ந்து காணப்படும் திரண்ட தோள்களையும் உடைய இடையன், கூழ் நிறைந்த குடுக்கையை இடையில் கட்டியவனாய்த் தன் இல்லாளுடனும் கன்றுகளோடு கூடிய ஆனிரையுடனும் அவற்றை மேய்ப்பதற்காகக் கானம் சேர அப்பொழுது அவ்விடையன் இசைத்துக்கொண்டு வந்த கருந்துளைக்குழலில் வில்யாழ் வரிசையில் வைக்கப்பட்டுள்ள நிரலினின்று எழக்கூடிய (ஓங்கு) இசை கோட்டதும் (யாழொடு சேர்ந்தது, இசை / பண் மூர்ச்சனைகளைத் தோற்றுவிக்கக் கூடிய தொன்முறை இயற்கை, வம்புறுமரபு ஆகிய நிரல்களும்) கொடியதும் (இசைக்குப் பகையான நுளையர் விளரி நிரலும்) ஆகிய ஒலி வரிசைகளாக, ஆனால் இவ்வொலி வரிசைகள் ஏழு துளைகளினுள்ளாகவே கலந்து / பரவி (விரைஇ) நிற்கின்றது எனக்காட்ட (யாழ்க்கருவியில் அமைவதுபோல் தொன்முறையியற்கை நிரல், வம்புறுமரபு நிரல், நுளையர் விளரி நிரல் ஆகியவற்றைக் குழலில் பிரித்துக்காட்டுவதியலாது. இந்நிரல்கள் ஒரே தான நிலையில் வில்யாழ் வரிசையிலேயே பரவி நிற்கின்றன என்பதை உணர்த்த)

இடையன் கூறியதாக உருத்திரங்கண்ணனார் கூறியது

"செந்தீத் தொட்ட கருந்துளைக்குழலின்
இன்றீம்பாலை முனையின், குமிழின்
புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின்
வில்யாழ் இசைக்கும் விரலெறி குறிஞ்சிப்
பல்காற்பறவை கிளை செத்து ஓர்க்கும்
புல்லார் வியன்புலம் போகி" –

பெரும்பாண் ., 179 - 184

இவ்வரிகளை
"செந்தீத் தொட்ட கருந்துளைக்குழலின்
இன்றீம்பாலை முனையின்"

(அவ்வாறு கிடைக்கும் பாலையானது)

"விரலெறி குறிஞ்சி வில்யாழ் இசைக்கும்
குமிழின் புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின்
பல்காற்பறவை கிளை செத்து ஓர்க்கும்"
(இப்பாலை)
"புல்லார் வியன்புலம் போகி"
எனச் சேர்க்கப் பொருள் தெளிவுறும்.

இனி இவ்வரிகளின் பொருள் காண்போம்.

செந்தீத் தொட்ட குழலின் துளைகள் (ஒலிவரிசை) கோட்டதாகிய பண்வகைகளை எழுப்பும் மூர்ச்சனைகளை (தொன்று ஒழுகு மரபு, வம்புறுமரபு வகைப் பண்கள்) அமைத்துக் கொள்ளுமாறு வில்யாழாக மபதநிசரிக என அமைந்துள்ளது.

யாழில் செய்வது போல் குழலின் நிரலை இளிகுரலாக்கி இயக்கலாகாது. ஏனெனில் குழலில் சரிகமபதநி என நிரலமையவில்லை மபதநிசரிக என வில்யாழாக உள்ளது என்பதைக் கூறினேன்.

குழலிலுள்ள இன்தீம்பாலையை (இனிய பண்மூர்ச்சனைகளைத் தோற்றுவிக்கக் கூடிய இவ்வில்யாழ் நிரலை) முனையின் (முன்னேற்றி வளர்ந்தால் / பண்ணுப்பெயர்த்தால் / இளி – குரலாக்கினால்)

(வளர்த்தல் என்பது இளிகுரலாக்குதலாகும் ; "வந்தது வளர்த்து வருவது ஒற்றி – சிலப் : அரங் : 65 என்றது காண்க)

என்னவாகும் என்பதைக் குழப்பத்தைத் தவிர்க்கும் பொருட்டு ஒரு யாழ்க்கருவி மூலம் விளக்குவேன்.

குழலில் உள்ளது போல் மபதநிசரிக எனும் வில்யாழ் வரிசையொலிகள் ஒரு புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரிநரம்புடைய யாழ்க்கருவியில் அமைந்ததாகக் கொள்ளவும். இவ்வில்யாழ் வரிசை குறிஞ்சியாழ் நிரல் குறிக்கும். எவ்வாறெனில் மாயவனுக்குரிய இடமாகிய, யாழ்க்கருவியின் முதல் இடத்தில் உழை (ம) யும் அதற்குக் கிளை நரம்பாக பலதேவனுக்குரிய ஐந்தாமிடத்தில் குரலும் (ச) அமைவதால் என்க. "தண்குரல் ஒருமுழை தோன்றக் குறிஞ்சியாழ்" என்றபடி யாழில்/ இசைக்கருவி ஒன்றில் மபதநிசரிக என்றமையும் நிரல் குறிஞ்சியாழ் நிரலாகும்.

(இது பேரியாழ் / செங்கோட்டியாழ் நரம்புகளான சரிகமபதநி இளிகுரலாவதால் ஏற்படும் வம்புறுமரபு நிரலாகிய மபதநிசரிக எனக் கருதப்படுகின்ற நிரலல்ல.

உண்மையான செங்கோட்டியாழ் அலகளவுகளிலமைந்துள்ள சுரங்களின் வரிசை என்பது 3 ஆவது அடிக்குறிப்பிலும் கூறப்பட்டது)

பல்காற்பறவை என்பது வண்டு எனப்பொருள்பட்டு 'இளி' எனும் யாழொலி குறித்தது. மிஞிற்றுக்குரல், சீரியாழ், இளிவாய்வண்டு என இலக்கியங்களில் கூறப்பட்டிருப்பது காண்க. பல்காற்பறவையின் கிளை என்பது இளியின் கிளை நரம்பாகிய துத்தம் குறித்தது.

"வில்யாழ் இசைக்கும் விரலெறி குறிஞ்சிப்
பல்காற்பறவை கிளை செத்து ஓர்க்கும்"

விரலால் தெறிக்க 'ம' எனும் ஒலி எழும்புகின்ற, மபதநிசரிக எனும் குறிஞ்சியாழ் குறிக்கும், வில்யாழ் ஒலி வரிசையின் பல்காற்பறவையின் கிளையாகிய துத்தத்தைக் குரலாகக் கருதிப் பெறப்படும் நிரலை ஒக்கும் என்பது தெளிவுறும்.

அதாவது குழலிலுள்ள (மபதநிசரிக எனும்) இன்தீம்பாலையை வளர்க்கக் கிடைக்கும் நிரல் மபதநிசரிக என குழலிலுள்ளது போன்றே வில்யாழாக நரம்புகளமைக்கப்பட்ட ஒரு யாழ்க் கருவியில் இளிக்குக் கிளையாக உள்ள துத்தத்தைக் குரலாகக் கருதிப் பெற்ற நிரலுக்கு ஒப்பாகும் என்பது தெளிவுறும் என்றவாறு.

விளக்கம்

ஒரு யாழ்க்கருவியில் வில்யாழ் வரிசையில் நரம்புகளமைத்து அதனிலுள்ள நிரலை இளி – குரலாக்கினால் (முனையின்) என்னாகும் என்பதையும் குழலில் நிகழக்கூடியதோடு அதனை ஒப்பிட்டும் விளக்கினால் பெருகுமாதலின் முதலில் அதனைப் படத்தின் மூலம் விளக்கிப் பின்னர் சுருக்கமாக உரைப்போம்.

தொன்முறையியற்கை வரிசை நரம்புகள் 4324432 மாத்திரை/அலகு இடைவெளிகளின்பின் சரிகமபதநி என நின்று தொன்று ஒழுகுமரபுப் பண்மூர்ச்சனைகளையும் (ஷட்ஜக்கிராம இராக மூர்ச்சனைகள்) 4324324 மாத்திரை இடைவெளிகளின்பின் பதநிசரிகம என நின்று (சரிகமபதநி எனச் சொல்லப்பட்டு) வம்புறுமரபுப் பண்மூர்ச்சனைகளையும் (மத்திமக் கிராம இராக மூர்ச்சனைகள்) தோற்றுவிக்கும். இவ்வம்புறுமரபு நிரலை இளி – குரலாக்கி வரும் நிரலும் மேலும் அவ்வாறே தோன்றக் கூடிய நிரல்களும் விலக்க வேண்டியவை ("வந்தது வளர்த்து வருவது ஒற்றி – சிலப் : அரங் ; வரி 65) என நூலிற்கூறிய அடிப்படையை நினைவிற்கொள்க. (வா.கோ.கிருஷ்ணமூர்த்தி, தமிழ்ப்பொழில், துணர் 68, மலர் 7 : பக் 854 - 855, 1994 காண்க).

யாழ்க்கருவி



படத்தில் காட்டியபடி யாழில் மபதநிசரிக எனும் நரம்புகள் 4432432 அலகு இடைவெளிகளின் பின் அமைத்து வில்யாழாகக் கட்டப்பட்டுள்ளது. யாழில் இருதான நிரல்களே கட்டப்படுமாயினும் பண்ணுப்பெயர்ப்பு மூலம் தோன்றும் அனைத்து நிரல்களையும் காட்ட மூன்று தான வில்யாழ் வரிசைகள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன.

இவ்வில்யாழ் வரிசையினின்று 4324432 அலகு இடைவெளிகளின்பின் அமையும் சரிகமபதநி யைத் தேர்ந்தெடுத்து அதன் மூர்ச்சனைகள் தொன்று ஒழுகு மரபுப் பண்களாக இசைக்கப்படும்.

குழல்



இந்நிரலின் இளியைக் குரலாகக் கருதி 4324324 அலகு இடைவெளிகளின் பின் அமையும் சரிகமபதநி யின் மூர்ச்சனைகள் வம்புறுமரபுப் பண்களாக இசைக்கப்படும். இதன் காரணமாகவே படத்தில் தொன்முறையியற்கை நிரலின் 4324324 அலகுகளின்பின் அமையும் பதநிசரிகம வம்புறுமரபு நிரலில் சரிகமபதநி எனக் காட்டப்பட்டுள்ளது.

படத்தில் வில்யாழ் நிரலின் 'ரி' க்கு எதிராகத் தொன்முறையியற்கை நிரலின் 'ரி' யும் அதற்கெதிராக வம்புறுமரபு நிரலின் "ப" வும் அதற்கெதிராக நுளையர் விளரி நிரலின் 'ச' வும் அமைவது காண்க. வம்புறுமரபு நிரலும்,

நுளையர் விளரி நிரலும் பண்ணுப்பெயர்ப்பால் தோன்றியவை. படத்தில் காட்டியபடி வம்புறுமரபு நிரலின் இளியைக் குரலாக்கக் கிடைக்கும் நிரலும் வில்யாழ் நிரலின் (தொன்முறையியற்கை நரம்புகளின் அளவில் நிற்கும் சுரங்கள்) இளியின் கிளையை ("ரி" யை) குரலாகக் கருதி அமைக்கப்படும் நிரலும் ஒன்றே என்பது விளங்கும். இது நுளையர் விளரி எனப்பட்டது. வடநூல்கள் இதனை நிஷாதக் கிராமம், (பண்ணுப்பெயர்ப்பினால் தோன்றுகின்ற வரிசைகளில் தொன்முறையியற்கை நிரலின் 'ச' வுக்கெதிராக "நி" அமையும் நிரல்), என்று கூறின.

குழலில் ஒங்குமிசைக்குக் காரணமான துளைகள் (ஒலி வரிசை) "கோட்டதும் கொடியதும் விரைஇ" என்று பெரும்பாணாற்றுப் படையில் கூறியது சிலம்பில் (அரங் : 56 - 57) "சித்திரை வஞ்சனைபுல்லிய" எனக் கூறப்பட்டுள்ளது. சிலம்பிலுள்ள இவ்வரிகளின் விரிவான விளக்கப் தமிழ்ப்பொழிலில் (துணர் 68, மலர் 7, பக் 851 - 853, 1994) காண்க.

குழலில் கொடியதாகிய நிரல் தோன்றுவதை உருத்திரங்கண்ணனார் எவ்வாறு யாழ்க்கருவி ஒன்றின் மூலம் விளக்கி அறிந்து கொள்ளச் சொன்னாரோ அவ்வாறே இளங்கோவடிகளும்

"வண்ணப்பட்டாடை யாழ் மேல் வைத்தாங்கு
இசையோன் பாடிய இசையின் இயற்கை
வந்தது வளர்த்து வருவது ஒற்றி (சிலப் : அரங் : 63 - 65)
. . . .
வழுவின்றிசைக்கும் குழலோன்றானும் (சிலப் : அரங் : 69)"

என்று கூறி குழலில் விலக்கவேண்டிய வஞ்சனையான நிரல்/கள் எதுவென யாழ்க்கருவி மூலம் (வண்ணப்பட்டடை யாழ்மேல் வைத்தாங்கு) விலக்கிக் கொள்ளக் கூறியதும் காண்க.

பாட்டின் இப்பகுதியை "புல்லார் வியன்புலம்போகி" எனக்கூறி உருத்திரங்கண்ணனார் முடித்துள்ளார். உரையாசிரியர்கள், "இடையன் புல்நிறைந்த அகன்றவிடம் நோக்கிச் சென்றான்" என உரை கூறியுள்ளார். இதன் முன்வரிகளில் வம்புறுமரபு நிரலை இளிகுரலாக்கினால் என்னவாகும் என்பதைக் கூறித் தோன்றும் நிரலை விளக்கியிருப்பதால் இங்கு கூறிய இசைக்கருத்துக்கு இப்பொருள் தொடர்பின்றி அமைகின்றது. எனவே

"புல்லார் வியன்புலம் போகி" என்றது இடையனும் இத்தகைய இசைத்தமிழறிவு மிக்கவனாய் உள்ள நாட்டின் வேந்தனே இடையன் கூறிய கொடியதாகிய அந்நிரல் அகன்றவானைக் கடந்து நின் பகைவர்கள் அடைந்த விண்ணுலகம் சென்றுவிட்டது என்று உருத்திரங்கண்ணனார் இளந்திரையனைப் புகழ்ந்ததாய்க் கொள்ளல் பொருத்தமுடைத்தாகும்.

பின்வந்த வடநூல்கள் பல இதே கருத்தினை மத்திமக்கிராமத்தின் பின்வரும் காந்தாரக்கிராமம் (காந்தாரம் – கந்தர்வம் – ஐந்தின் தொகுப்பு, of the five, the fifth நிஷாத, காந்தார, தைவத, ரிஷப, பஞ்சம கிராமங்கள்) நாரதரால் வானுலகம் எடுத்துச் செல்லப்பட்டுவிட்டது எனக்கூறி நிலவுலகில் வாழ்பவர்களால் இதனை இயக்கிப் பண்ணிசை எழுப்ப இயலாது என்பதை விளக்கியுள்ளது.

குழற்கருவியில் நிகழ்வதை யாழ்க்கருவி மூலம் விளக்கித் தெளிவுபடுத்திய காரணம் காண்போம்.

யாழ்க்கருவியில் சரிகமபதநி எனும் நரம்புகள் பொதுவாக இருதான நிலைகளில் அமைக்கப்படும். குழலில் நிகழ்வதை யாழ் மூலம் விளக்க நேரிடுவதால் யாழினும் குழலிலமைவது போல் வில்யாழ் வரிசையில் நரம்புகளமைக்கப்பட்டுள்ளன எனக் கொள்க. அவ்வில்யாழ் வரிசையினின்று சரிகமபதநி என்ற வரிசையைத் தேர்ந்தெடுத்து தொன்முறையியற்கை நிரல் பெற்று இசைக்கப்படும். தொன்முறையியற்கை நிரலின் சரிகமபதநி யும் வில்யாழ் வரிசையிலுள்ள சரிகமபதநி யும் ஒன்றே என்பது கீழேயுள்ள படத்திலும் / பதிகத்திலும் விளக்கப்பட்டுள்ளது. இத்தொன்முறையியற்கை நிரலின் முதல் தானத்திலுள்ள இளியைக் குரலாக்க பதநிசரிகம என்பது சரிகமபதநி எனத் திரிந்து மாத்திரை / அலகு அளவுகள் வேறுபட்டு வம்புறுமரபு நிரலாக நிற்பதையும் அதனை மீண்டும் இளிகுரலாக்க தொன்முறையியற்கை நிரலின் / வில்யாழ் நிரலின் துத்தம் (ரி) வம்புறுமரபு நிரலில் இளி (ப) யாகவும் அவ்விளி நுளையர் விளரி நிரலில் குரலாகவும் (ச) நிற்பது காணலாம். இவ்வாறு 'ரி', 'ப', 'ச' என்பவை வெவ்வேறு தந்திரிகரத்தினிடத்தில் (மெட்டுக்களில்) அமைவது காட்டமுடியும். இது பதிகமாகக் கீழே காட்டியுள்ளது காண்க.

பதிகம்

4 4 3 2 4 3 2 4 4 3 2 4 3 2 4 4 3 2 4
ம ப த நி ச ரி க ம ப த நி ச ரி க ம ப த நி ச — யாழ்க்கருவியில் வில்யாழ் அமைக்கப்பட்ட முறை

ச ரி க ம ப த நி ச ரி க ம ப த நி ச — வில்யாழின்று தேர்ந்தெடுத்து இசைக்கப்படும் தொன்முறையியற்கை நிரல்

ச ரி க ம ப த நி ச ரி க ம — தொன்முறை இயற்கை நிரல் இளி–குரலாகி வந்த வம்புறுமரபு நிரல்

ச ரி க ம ப த நி — வம்புறுமரபு நிரலை இளி–குரலாக்கிப்பெற்ற நுளையர் விளரி நிரல்

(எண்கள் நரம்புகள் நிற்கும் அலகுகள் குறிப்பன. தொன்முறை இயற்கை நிரலின் 'ச' நிற்குமிடத்து நுளையர் விளரி நிரலில் 'நி' நிற்பதால் இது நிஷாதக்கிராமம் எனப்படும்).

ஆயின் குழலில் ஏழு துளைகளே உள்ளதாலும் இசையெழுப்பும்போது இதனில் ஆறு துளைகளே இயக்கம் பெறுவதாலும் வில்யாழாக அமையும் இத்துளைகளில் தோன்றும் ஒலி வரிசைகளில் தொன்முறையியற்கை, வம்புறுமரபு, நுளையர் விளரி ஆகிய நிரல்களை அமைத்துக்காட்டும் போது ஒரே துளையில் மூன்று வெவ்வேறு ஒலிகள் தோன்றுவது விளக்கப்பட வேண்டியிருப்பதால் நேரிடும் குழப்பத்தைத் தவிர்க்க முதலில் யாழ்க்கருவி மூலம் இதனை அறிந்து கொள்ளக் கூறி பின்னர் குழலில் நிகழ்வதை அறிந்துகொண்டு குழலிலுள்ள நிரலை இளி – குரலாக்கக் கூடாது என்பதனைத் தெளிந்தறிய வேண்டும் எனக் கூறினான் என்க.

இடையன் மூலம் உருத்திரங்கண்ணனார் உணர்த்திய இசைக்கருத்து

யாழில் அமைவதுபோல், சரிகமபதநி என்றல்லாமல் குழலில் மபதநிசரிக என்று நரம்பின் வரிசைஅமைந்துள்ளது. இதனில் முதல் துளை இயக்கம் பெறாது ஆதலின் இரண்டாம் துளை முதல் பதநிசரிகம என்று ஒலிகள் எழுப்பப்படும். இதனால் 'க', 'ம' ஆகிய இரு ஒலிகளும் ஏழாம் துளையில் எழும் என்பதறிக.

எனவே குழலில் பதநிசரிகம எனும் ஒலி வரிசை இயக்கம் பெறும் வரிசையாக அமைகின்றது. இவ்வரிசை வம்புறுமரபு நிரலாகிய சரிகம ஆகும். வம்புறுமரபு நிரலின் இளியைக் குரலாக்கி ஓர் நிரல் அமைத்து அதனில் இசை மூர்ச்சனைகளைப் பெறமுடியாது. இது கொடியதாகிய நுளையர் விளரி நிரலாகும். குழலில் உள்ள 'ரி' (மபதநிசரிக என முன்பு அமைக்கப்பட்ட வில்யாழ் ஒலி வரிசையிலுள்ள 'ரி') சரிகமபதநி எனக் கருதப்படும் வம்புறுமரபின் 'ப' ஆவதால் வம்புறுமரபின் இளியைக் குரலாக்கிப் பெறப்படும் நிரல் வில்யாழின் துத்தத்தைக் குரலாக்கிப் பெறும் நிரலை ஒக்கும். இதனைக் குழப்பமின்றி விளக்கிக் கொள்ள வில்யாழ் வரிசையில் (மபதநிசரிக என) நரம்புகளமைக்கப்பட்டதோர் யாழ்க்கருவியில் பண்ணுப்பெயர்த்து நிரல்கள் பெற்று அதனில் தோன்றும் நுளையர்விளரி நிரலின் குரல் வில்யாழின் துத்தத்திற்கு எதிராக அமைவது காண்க. இவ்வாறு தொன்முறையியற்கை நிரலின் சரிகமபதநி எனும் நரம்புகளுக்கெதிராக நிசரிகமபத என்றமையும் நிரல் நுளையர்விளரி நிரல் என்றும் பிற்காலத்து இது நிஷாதக் கிராம நிரல் என்றும் கூறப்பட்டது. இந்நிரல் 3 2 4 4 3 2 4 அலகு வரிசையில் அமையும் கிராமம் (சரிகமபதநி எனக் கருதப்படும் நிரல்) ஆதலால் நான்கு அலகின்பின் அமைய வேண்டிய முதல் நரம்பும் மூன்றலகின் பின் அமைய வேண்டிய இரண்டாம் நரம்பும் பெறாத இந்நிரல் பண்மூர்ச்சனைகளைப் பிறப்பிக்கும் தகுதியைப் பெற்றதல்ல. ஆகவே கொடியது எனக் கூறப்பட்டது.

முடிவுரை

வில்யாழ் என்றது நரம்பிசைக்கருவியல்ல. சரிகமபதநி என்றது பேரியாழ்/ செங்கோட்டியாழ் என்றும் பதநிசரிகம என்றது சீரியாழ் /சகோடயாழ் என்றும் கூறியது போல் மபதநிசரிக என்ற வரிசையிலமையும் சுரங்கள் வில்யாழ் எனப்பட்டது.

பின்குறிப்பு :-

இக்கட்டுரையில் பல பகுதிகளில் ஒரே கருத்து மீண்டும் மீண்டும் உரைக்கப்பட்டுள்ளது. தமிழிசைக் கலைச் சொற்களின் பொருள்களும் இலக்கணமாக விளக்கப்பட்ட இசைக் கருத்துக்களும் இன்னும் வரையறுத்து நிலைப்படுத்தாமல் இருப்பதால் (not standardised) ஓர் இசைக் கருத்துக் கோவையின் ஒவ்வொரு கருத்தையும் ஐயம்திரிபற விளக்க இவ்வாறு உரைக்க நேரிடுகின்றது. எனவே இக்குறையைச் சான்றோர்கள் பெரிதாகக் கருதாமல் இக்கட்டுரையின் நிறையைக் கொள்வார்களாக.

தமிழ்ப்பொழில் ஆசிரியர் குழு

திரு.நா.கலியமூர்த்தி,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

திரு.ச.இராமநாதன்,
முன்னாள் தலைவர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

திரு.த.கோ.ப.கோவிந்தசாமி, பி.காம்.,
செயலாளர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

திரு.கலைமாச்செல்வர் எஸ்.டி காசிராஜன், ஐ.ஏ.எஸ்.,
முன்னாள் அரசுச் செயலாளர், சென்னை.

திரு.சிலம்பொலி சு.செல்லப்பன், எம்.ஏ., பி.டி., பி.எல்., பிஎச்.டி.,
சென்னை.

திரு.முனைவர்.கி.கருணாகரன்,
துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

திரு.முனைவர்.தமிழண்ணல், எம்.ஏ.,பிஎச்.டி.,
மதுரை - 625 020.

திரு.முனைவர்.மு.கோவிந்தராசன்,
சென்னை.

திரு.முனைவர்.சோ.ந.கந்தசாமி, எம்.ஏ.,பி.லிட்.,பிஎச்.டி.,
இலக்கியத்துறைத் தலைவர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

திரு.முனைவர்.மா.இராமலிங்கம், எம்.ஏ.,பிஎச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர், பாரதிதாசன் பல்கலைக் கழகம்.

திரு.தமிழ்த்தொண்டர் கோ.முத்துப்பிள்ளை, பி.ஏ.,
முன்னாள் அரசு இணைச் செயலாளர், சென்னை.

திரு.முனைவர்.ஈரோடு தமிழன்பன், எம்.ஏ., பிஎச்.டி.,
சென்னை.

திரு.பேராசிரியர் பி.விருத்தாசலம், எம்.ஏ.,
முன்னாள் முதல்வர், த.உ.க. கலைக்கல்லூரி.

திரு.முனைவர்.இரா.குருநாதன்,
முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக்கல்லூரி.

திரு.புலவர்.செ.இராசு, எம்.ஏ.,
இணைப்பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

திரு.புலவர்.ஆ.பாலன், எம்.ஏ., எம்.ஃபில்.,பிஎச்.டி.,
துணை முதல்வர், த.உ. கரந்தைக் கலைக் கல்லூரி.

திரு.புலவர்.மீனா.இராமதாசு, எம்.ஏ., எம்.எட்.,
முன்னாள் தலைமைத் தமிழாசிரியர், உ.மே. நி. பள்ளி

திரு.முனைவர்.பா.மதிவாணன், எம்.ஏ.,எம்.ஃபில்.,பிஎச்.டி.,
தமிழ் விரிவுரையாளர், த.உ. கரந்தைக் கலைக்கல்லூரி.

Regd. No. TN/TJ/24 நூல் அஞ்சல்

பெறுநர்

திருமிகு

நூலகர்,
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்,
சென்னை - 600 005

ஆசிரியர்
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
தஞ்சாவூர் - 613 002.

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

யாழ்நூல் ஆசிரியர் – ஆசிரியர் விபுலானந்த அடிகள்	ரூ. 100 00
கட்டுரைப் பொழில் தமிழ்ச் சங்க மணிவிழா மலர்	ரூ. 80 00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த.வே.உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ. 60 00
இராசராசசோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டுவிழா நினைவு சிறப்பிதழ்	ரூ. 6 00
பரணர் – ஆசிரியா.ஔவை சு.துரைசாமிப்பிள்ளை	ரூ. 35 00
பாயிர விருத்தி – ஆசிரியர் அரசஞ்.சண்முகனார்	ரூ. 60 00
அறிவியல் தமிழ்	ரூ. 125 00
எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்பு மலர்	ரூ. 100 00

விற்பனைக் கழிவு 20% உண்டு. அஞ்சற் செலவு தனி

வெளியிடுபவர் : திரு.நா.கலியமூர்த்தி
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர் - 613 002.

அச்சிடுபவர் : இரா.வைஜெயந்திமாலா, லக்மி பிரிண்டர்ஸ்,
1086, காக்கா வட்டாரம், தஞ்சாவூர் - 613 009.